Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 21 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.ஆகிர் 17 (05.08.2004) வியாழக்கிழமை இதழ்:307

றெனி
பல், மூக்குக் கண்ணாடியகம்
- கண் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக்கொள்ள
- உறுதியான பற்களைக் கட்டிக்கொள்ள
- மிதப்பு பற்களுக்கு கிளிப் செய்து கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
கண்டி வீதி, சாவகச்சேரி. 540, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். பிரதான வீதி, பருத்தித்துறை.

# அமெரிக்காவின் பசுபிக் கடற்படை தளபதி

# கொழும்புக்கு நேற்று இரகசிய விஜயம்!

## இராணுவ தலைமையகத்தில் அணிவகுப்பு மரியாதை

(கொழும்பு)

**அமெரிக்காவின் விசேட கடற்படைப் பிரிவின் பசுபிக் பிராந்திய கடற்படைத் தளபதியான லெப் ஜெனரல் வலஸ் சி.கிறேக்சன் இலங்கைக்கு இரகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கிறார்.**


**கொழும்புக்கு விஜயம் செய்துள்ள லெப் ஜெனரல் வலஸ் சி.கிறேக்சன் நேற்று இராணுவ தலைமையகத்துக்கு விஜயம் செய்ததாகத் தெரியவருகிறது.**



இதன்போது - இராணுவத்தினரின் சிங்கப் படைப் பிரிவின் அணிவகுப்பு மரியாதையும் வழங்கப்பட்டது.

இராணுவத் தலைமையகத்தில் இவரை வரவேற்ற இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட அவருடன் நீண்ட நேரம் தனியான இரகசியப் பேச்சுக்களை நடத்தினார்.

இரு தரப்பு விவகாரங்கள், ஒத்துழைப்புக்கள், பயிற்சி போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட, அமெரிக்க கடற்படை பசுபிக் பிராந்திய கட்டளைத் தளபதியுடன் பேச்சுக்களை நடத்தியதாகவும் தெரியவருகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)





### வன்னிப்பகுதி விபத்தில் ஒருவர் பலி: ஐவர் காயம்

(கிளிநொச்சி)

வன்னிப் பெருநிலப்பரப்பின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று நடைபெற்ற விபத்துச் சம்பவங்களில் ஒருவர் உயிரிழந்ததுடன், 5பேர் காயமடைந்தனர்

நேற்று மாலை 3.15 மணியளவில் இரணைமடு சந்திக்கு சமீபமாக நடைபெற்ற விபத்துச் சம்பவத்தில் பாரதிபுரத்தைச் சேர்ந்த கந்தையா இரத்தினசாமி (வயது-56) என்ற ஆறு பிள்ளைகளின் தந்தையாரே உயிரிழந்தார்.

வீதி புனரமைக்கும் வேலைக்கென கொக்காவில் பகுதியிலி (12 ஆம் பக்கம் பார்க்க)

### க.பொ.த உயர்தர பெறுபேறு நாளை வெளியிடப்படும்

(கொழும்பு)

க.பொ.த உயர்தரப் பெறுபேறுகளை நாளை இரவு முதல் இணையத்தளம் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமென பரீட்சை ஆணையாளர் மகிந்த விஜயசிறி தெரிவித்தார்.

இதேவேளை, பரீட்சைப் பெறுபேறுகளைப் பாடசாலைகள் ரீதியாக எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

இந்தமுறை இந்தப் பரீட்சைக்கு 2 லட்சத்து 35 ஆயிரத்திற்கும் அதிகமானோர் தோற்றியிருந்தனர் எனவும் அவர் தெரிவித்தார்.

### கருணா குழு உறுப்பினர் ஏறாவூரில் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏறாவூர் பொலிஸ் பிரதேசத்துக்குட்பட்ட மாவடிவேம்பு பகுதியில் கருணா குழுவைச் சேர்ந்த ஒருவர் நேற்று முன்தினம் இரவு சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற சம்பவத்தில் உயிரிழந்தவர் மாவடிவேம்பைச் சேர்ந்த கே.விமலேந்திரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவரின் வீட்டிற்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாதவர்களே துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

### கிரனைட் வீச்சில் பெண்ணொருவர் படுகாயம்

மட்டக்களப்பு - கிரான் பகுதியிலுள்ள வீடொன்றின் மீது நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதவர்கள் நடத்திய கிரனைட் தாக்குதலில் பெண்ணொருவர் படுகாயமடைந்தார்.

இந்தக் கிரனைட் வீச்சில் வீட்டிலிருந்த முத்துலிங்கம் சோதிமுத்து (வயது - 48) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

## இடைக்கால நிர்வாக யோசனைப்படி புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க மக்கள் ஆணை வழங்கவில்லை!

### சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாகசபை யோசனைகளுக்கு அமைய பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்துக்கோ, ஐக்கிய தேசியக் கட்சிக்கோ மக்கள் இன்னும் ஆணையை வழங்கவில்லை என ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இடைக்கால நிர்வாக சபைக்குப் பின்னர் 'இலங்கையின் சமாதானம்' என்ற தலைப்பில் கொழும்பில் நடைபெற்ற (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆளும் கூட்டணி தலைமையிலிருந்து ஜனாதிபதி சந்திரிகா பதவி விலகினார்!

### வேலைப்பளு காரணமாம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமைப்பதவியிலிருந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விலகிக்கொள்வதாக அறிவித்துள்ளார்.

நேற்று முதல் அமுலுக்குவரும் வகையில் ஜனாதிபதி சந்திரிகா ஆளும் கூட்டணியின் தலைமைப் பதவியிலிருந்து விலகியுள்ளார் என்று ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்த



அறிக்கையில் தெரிவித்தது.

இந்தப்பதவிக்குத் தகுதியான ஒருவரை சிறிலங்கா சுதந்திரக் கட்சி விரைவில் நியமிக்கும் என்று ஜனாதிபதி செயலகம் மேலும் தெரிவித்தது.

வேலைப்பளு காரணமாக தனது தலைமைப்பதவியை விட்டு விலகுவதாக சந்திரிகா வெளியே கூறினாலும் இதற்கு உட்காரணங்கள் இருக்கலாம் என்று இராஜதந்திர வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

ஜே.வி.பி.யுடன் கூட்டுச் சேர்ந்ததால் தற்போது வலுவிழந்துள்ள (12 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாக யோசனைப்படி பேச்சு நடத்த தயாரில்லை என வெளியான செய்திக்கு மறுப்பு!

### ஜனாதிபதி செயலகம் அறிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனையின் அடிப்படையில் பேச்சுக்களை நடத்தத் தயாரென ஜனாதிபதி சந்திரிகா ஒருபோதும் கூறவில்லை என வெளிவந்த செய்திகளை ஜனாதிபதி செயலகம் மறுத்துள்ளது.

ஆளும் கூட்டணியின் நிர்வாகக் குழுக்கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா, இடைக்கால நிர்வாகசபை யோசனையின் அடிப்படையில் பேச்சுக்களை நடத்தத் தயாரென தான் ஒரு போதும் கூறவில்லை எனத் தெரிவித்ததாக - அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தகவல் வெளியிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆனால், இந்தச் செய்தியை ஜனாதிபதி செயலகம் நேற்று முற்றாக நிராகரித்தது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வாதிட வழக்கறிஞர்கள் இல்லை; ராஜபக்ஷவின் வழக்கு ஒத்திவைப்பு!

(கொழும்பு)

வழக்கறிஞர்கள் ஆஜராகாமையால் லான்ஸ் கோப்ரல் ராஜபக்ஷ மீதான ஆட்கொணர்வு மனு அடுத்த மாதம் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்.குடாநாட்டில் காணாமற்போன ஆறுபேர் தொடர்பான விசாரணைகளுக்காக லான்ஸ் கோப்ரல் ராஜபக்ஷ நேற்று யாழ்.மேல்நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கு விசாரணைகளை விரைவு படுத்துவதற்காக கடந்த முறை நடைபெற்ற விசாரணையின் போது ராஜபக்ஷ (12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

# எச்.என்.டி.ஏ டிப்ளோமா பட்டதாரிகள் வேலைவாய்ப்பு வழங்குவதில் புறக்கணிப்பு

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பில் உயர் தேசிய கணக்கியல், வர்த்தக டிப்ளோமா பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டமை அடிப்படை மனித உரிமை மீறல் எனத் தெரிவித்து யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட உயர்தேசிய கணக்கியல் வர்த்தகப் பட்டதாரிகள் சங்கத்தினரே இந்த முறைப்பாட்டை நேற்று யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தெரிவித்துள்ளனர்.

அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது - அரச வர்த்தமானி அறிவித்தல் மூலம் எச்.என்.டி.ஏ, எச்.என்.டி.சி, எச்.என்.டி.எம் ஆகியன பட்டமாக அறிவிக்கப்பட்டன. ஆனால், தற்போது வழங்கப்பட்டுள்ள பட்டதாரிகள் நியமனத்தில் இவை புறக்கணிக்கப்பட்டுள்ளமையானது பட்டம்பெற்ற மாணவர் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக விசாரணை நடத்தி, மனித உரிமை ஆணைக்குழு எமக்கு நீதியான தீர்ப்பைப் பெற்றுத்தரவேண்டுமென அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## மல்ரிமீடியா புறொஜெக்டர் உரிமையாளரிடம் ஒப்படைப்பு

முக்மாலை சோதனை நிலையத்தில் கடந்த 31 ஆம் திகதி தவறுதலாக கைவிட்டுச் சென்ற ஷாப் ரக மல்ரி மீடியா புறொஜெக்டர் ஒன்று, அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவ சிப்பாயினால் கண்டெடுக்கப்பட்டு அதன் உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டது.

மூர்த்திநகர் - கோவில் வீதியில் வசிக்கும் சீ.மகாலிங்கம் என்பவருடையது என இனங்காணப்பட்டு அவரிடம் கையளிக்கப்பட்டது என்று - யாழ்.பாதுகாப்பு நடவடிக்கை தலைமைச்செயலகம் அறிவித்துள்ளது.

## மடுமாதா தேவாலயத்தின் உற்சவத்திற்கு செல்ல போக்குவரத்து வசதி!

மடுமாதா தேவாலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு விசேட போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மன்னார் ஆயர் தெரிவித்தார்.

மடுமாதா தேவாலயத்தின் வருடாந்த உற்சவம் நாளைமுதல் எதிர்வரும் 15 ஆம் திகதிவரை சிறப்பாக நடைபெறவுள்ளமையால் அதனையொட்டி வீதித்தடைகள் நீக்கப்பட்டு பொதுமக்களுக்குப் போக்குவரத்துக்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, ஆலய வளாகத்தினுள் மதுபான வகைகளைக் கொண்டு செல்வதும், தடைசெய்யப்பட்டுள்ளதுடன், பக்தர்கள் தங்கிச் செல்லக்கூடிய வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## எழுதுமட்டுவாள் அரசினர் பாடசாலை விரைவில் சொந்த இடத்திற்கு!

எழுதுமட்டுவாள் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மிக விரைவில் சொந்த இடத்தில் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலை கடந்த இரண்டு வருடங்களாக படையினரின் இராணுவ முகாமாக செயற்பட்டு வந்தது. கடந்த சில மாதங்தளுக்கு முன்னர் இந்தப் பகுதி மக்களின் போராட்டத்தின் விளைவாக படையினரால் விடுவிக்கப்பட்டது.

யுத்த அனர்த்தங்களால் சிதைந்து போன கட்டடங்களை மறுசீரமைக்க சுவிஸ் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் என்ற தனியார் நிறுவனம் முன்வந்து இருக்கிறது. இதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எழுதுமட்டுவாள் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை தற்பொழுது மிருசுவில் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையுடன் தற்காலிகமாக இயங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (17)

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 19 – 09 – 1949



இறப்பு 04 – 08 – 2004

### சின்னச்சாமி சுப்பையா

04.08.2004 நேற்றைய தினம் காலமான துர்க்கா இரும்பு வாணிப உரிமையாளர் சின்னச்சாமி சுப்பையா அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிப்பதுடன், அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வைத்தீஸ்வரா சந்தி
வர்த்தகர்கள், ஊழியர்கள்,
நண்பர்கள்

(800)

## சின்னஞ்சிறு செய்திகள்

### பிரதேச செயலர்கள் நியமனம்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை பிரதேச செயலராக எழிலரசி அன்ரன் யோகநாயகம் நியமிக்கப்பட்டுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுவரை தெல்லிப்பளை பிரதேச செயலராக இருந்த கலாநிதி க.குணராசா யாழ்.மாநகர ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளதையடுத்து, அவரது இடத்துக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவின் உதவி பிரதேச செயலராகப் பகுதி வகித்த இவர், பிரதேச செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### பொதுக்கூட்டம்

(மட்டுவில்)

மட்டுவில் வடக்கு முத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலனசபையின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (24)

### நவநாள் நிகழ்வு

(கொக்குவில்)

நாவாந்துறை - பரலோக மாதா தேவாலய வருடாந்த நவநாள் கொண்டாட்டம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறவிருக்கிறது.

தினமும் மாலை 5.15 மணிக்கு நோவினை ஆரம்பமாகும். செபமாலை, பிரசங்கம், திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

14 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.15 மணிக்கு சற்பிரசாத திருநாளும், சற்பிரகாரமும் இடம்பெறும்.

15 ஆம் திகதி காலை 7 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். மாலை 5.30 மணிக்கு திருச்சொரூப பவனி நடைபெறும். (206)

### பிரதேச செயலர்களுக்கான கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்றுகாலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவிருந்த பிரதேச செயலர்களுக்கான கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் எ. சிவசாமி அறிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடல் எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

### வலி.வடக்கு உள்ளூராட்சி வார நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு பிரதேசசபையின் உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வும், பரிசளிப்பு விழாவும் இன்று மாலை 2.30 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பிரதேசசபையின் செயலாளர் செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

# கொரியத் தூதுவரின் யாழ். விஜயம் ரத்து!

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு வரவிருந்த கொரிய நாட்டின் இலங்கைக்கான தூதுவரின் வருகை திடீரென ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

கொரியாவின் நிதி உதவியின் மூலமும், இலங்கை அரசின் நிதி உதவியுடனும் அமைக்கப்படவிருந்த புதிய கட்டடத் தொகுதிக்கான அடையாள தூபியைத் திறந்துவைக்கும் பொருட்டு இவர் வருகை தரவிருந்தார்.

எனினும், தவிர்க்கமுடியாத காரணத்தால் இவரது வருகை அடுத்த வாரத்திற்கு ஒத்திப்போடப்பட்டுள்ளதாக நேற்று மாலை யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் என். யோகராஜனுக்கு, இலங்கைக்கான கொரிய நாட்டுத் தூதுவராலயம் அறிவித்துள்ளதாகத் தெரியவருகிறது. (ப)

## ஜன்னல் கம்பி உடைத்து திருடர்கள் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

வீட்டார் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த சமயம் - ஜன்னலை உடைத்து பெறுமதி மிக்க பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 2 மணியளவில் யாழ்.இந்துக கல்லூரிக்கு அருகிலுள்ள வீடொன்றில் நடைபெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது -

கே.கே.எஸ் வீதியிலுள்ள இ.இராசேந்திரம் என்பவரது வீட்டின் ஜன்னலை உடைத்துக்கொண்டு உள் நுழைந்த திருடர்கள் வீட்டிலிருந்த ஏழுபவுண் நகை, கையடக்கத் தொலைபேசி, சி.டி பிளேயர், வானொலிப்பெட்டி, 6 ஆயிரம் ரூபா பணம் மற்றும் மின்சார உபகரணங்கள் முதலானவற்றையும் திருடிக்கொண்டு தப்பிச்சென்றுள்ளனர்.

இவர்கள் தப்பித்துச் செல்கையிலேயே வீட்டாருக்கு சத்தம் கேட்டுள்ளது. எழுந்து பார்த்தபோது மேற்குறிப்பிட்ட பொருட்கள் காணாமற் போயிருந்தமை தெரியவந்தது.

இது தொடர்பாக பொருட்களை இழந்தவர்கள் நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (ப)

## தென்மராட்சி பாதுகாப்பு வலயத்தில் வசதிகள் அற்ற நிலையில் மீளக்குடியமர்ந்த மக்கள்!

தென்மராட்சி தெற்கு உயர்பாதுகாப்பு வலயங்களை அண்மித்த பகுதிகளான கைதடி, நாவற்குழி, தனங்களப்பு, கோயிலாக்கண்டி ஆகிய பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்கள் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் வாழ்ந்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படையினரால் அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட இந்தப் பிரதேச மக்கள் இத்தகைய அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வருகின்றனர்.

குறிப்பாக குடிநீர் வசதிகள், மலசலகூட வசதிகள் அற்ற நிலையில் இருப்பதால் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாத நிலையில் இவர்கள் உள்ளனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு இந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (17)

## கிராம அலுவலர்களுக்கான ஆற்றலை மேம்படுத்த நீர்ப் அமைப்பு நடவடிக்கை

(வடமராட்சி)

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் கிராமசேவையாளர்களின் தரத்தை மேம்படுத்துவதற்கு - 'நீர்ப்' அமைப்பினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட யாழ்.மாவட்டத்தின் மக்களுக்கான அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் என்பன கிராம சேவையாளர்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும், யாழ்.மாவட்டத்தில் சேவையிலுள்ள கிராம சேவையாளர்களுக்குத் துறைசார் நிபுணத்துவங்கள் இன்மையால் மக்களுக்கான அபிவிருத்தி - புனர்வாழ்வு நடவடிக்கைகள் என்பவற்றில் பாதிப்பு ஏற்படுவதைத் தவிர்க்கவே நீர்ப் இதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இதன் ஒரு அம்சமாக கிராம சேவகர்களுக்கு ஆற்றல் மேம்பாட்டு கருத்தரங்குகளை நீர்ப் அமைப்பு நடத்திவருகிறது. (17)

### அவசர பொதுக்கூட்டம்

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்திற்கு பிரதேச செயலகர் பிரிவுரீதியாக தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களுக்கான அவசர பொதுக்கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு வேலையற்றோர் பட்டதாரிகள் சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, பிரதேசசெயலகங்களில் இதுவரை பதிவினை மேற்கொள்ளாதவர்கள் இன்று காலை 9.30 மணிமுதல் 4.30 மணிவரை சங்கப் பணிமனையில் பதிவினை மேற்கொள்ளமுடியும் என யாழ்.மாவட்ட பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

### அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (29)


நிறஞ்சனாஸ் சங்கானை
இன்றுமுதல்
நந்தா, ரேகா, வடிவேல் நடித்த
புன்னகைப் பூவே
காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே) Saving Private Ryan
(சி-2723)

நாகம்ஸ் சுன்னாகம்

ரஜினிகாந்த், நக்மா, ரகுவரன், ஜனகராஜ் நடித்த
பாட்ஷா
அடுத்த வெளியீடு மானஸ்தன்
தினசரி காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.

அர்ஜுன், மீனா, நெப்போலியன், மணிவண்ணன் நடித்த
அன்புசகோதரன்
6 ஆம் திகதி முதல் குத்து
காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30 (பு.நே)
(சி-2725)

# துறைமுகங்களின் பாதுகாப்பு அமெரிக்காவுடன் ஒப்பந்தம்!

இலங்கைத் துறைமுகங்களின் பாதுகாப்புக்கு அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்டுள்ளதாக, அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் -

ஏற்கனவே சர்வதேச நாடுகள் இலங்கைத் துறைமுகங்களின் பாதுகாப்புக்கு தயை புரிவதாக இணங்கியிருப்பதுடன், சர்வதேசரீதியிலான பாதுகாப்புக்குள்ளும் இலங்கைத்துறைமுகங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான ஒப்பந்தத்தில் அமெரிக்காவுக்குச் சென்ற கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி கைச்சாத்திட்டுள்ளார். இதனால் பெரும் நன்மை ஏற்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் கடற்பிராந்தியப் பாதுகாப்புக்கான கடற்படைத்தளபாடங்களை அமெரிக்கா இலங்கைக்கு இலவசமாக வழங்கும் என்பதும் முக்கியமானது என்றும் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். (01)

## பிரதி நம்பிக்கையாளர் விளக்க மறியல் வைப்பு

(கொழும்பு)

அமெரிக்கத் தூதரகத்துக்கு தவறான தகவல்களை வழங்கியதாக குற்றம் சாட்டப்பட்டு, அரசாங்க நம்பிக்கையாளர் திணைக்களத்தின் பிரதி நம்பிக்கையாளர் தேவதிஸ்ஸ பண்டார கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட இவரை, கொழும்பு மாவட்ட நீதிவான் முன் ஆஜர் செய்தபோதே எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

## முஸ்லிம் இளைஞர்கள்

# விரைவில் முஸ்லிம் தலைவர்களுக்கு பாடம் கற்றுக் கொடுப்பார்களாம்!

### ரிசாத் பதியுதீன் தெரிவிப்பு

தமிழ் இளைஞர்கள் - தமிழ் அரசியல் தலைவர்களுக்கு கற்றுக் கொடுத்த பாடத்தை - முஸ்லிம் இளைஞர்கள் விரைவில் முஸ்லிம் அரசி யல் தலைவர்களுக்கு கற்றுத் தரும் காலம் வருமென நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

முஸ்லிம்கள் ஓரணியில் திரண்டு, சமூக விடுதலைக்கு உழைக்க வேண்டிய வேளையில் அந்த தலைவர்கள் அதற்கு அப்பாற்பட்டு செயற்படுகின்றனர் என்றும் அவர் மேலும் குற்றஞ்சாட்டினார்.

## சிறுவன் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(மட்டக்களப்பு)

தமது அமைப்பில் இணைய வந்த சிறுவன் ஒருவனை தமிழீழ விடுதலைப் புலிகள் பெற்றோரிடம் ஒப்படைத்தனர்.

மட்டக்களப்பு பெரிய போரதீவு ஆற்றங்கரை வீதியைச் சேர்ந்த 14 வயதான சிறுவனே பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கரடியனாறு பிரதேச இராணுவ தளபதி சிவராம் இந்த சிறுவனை பெற்றோரிடம் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஒப்படைத்தனர்.

இவ்வாறாக தமது அமைப்பில் இணைய வந்த சிறுவர்களை தமிழீழ விடுதலைப் புலிகள் பெற்றோரிடம் ஒப்படைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (01)

# ரோக்கியோ நிதியுதவியை இலங்கை இழக்கும் நிலை!

## அரசு மீது ஐ.தே.க. சாடல்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திடம் உறுதியான சமாதான வேலைத்திட்டம் எதுவும் இல்லாததால், ரோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட நிதியுதவி இலங்கைக்கு கிடைக்காமல் போகும் அபாயநிலை ஏற்பட்டிருப்பதாக - ஐக்கிய தேசியக்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இது குறித்து கருத்து வெளியிடுகையில் -

அரசாங்கத்தின் உறுதியற்ற சமாதானத் திட்டத்தால், நாட்டு மக்களுக்கு கிடைக்கவேண்டிய 45 ஆயிரம் கோடி ரூபாவை இழக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

இது கவலைக்குரிய விடயம் ரோக்கியோ மாநாட்டு நிதி- இலங்கை மக்களுக்கு கிடைக்காமல் போவதற்காக, ஜனாதிபதி சந்திரிகா நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திடம் இருந்து பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றதன் மூலம், ஜனாதிபதி சந்திரிகா சமாதான முயற்சிகளுக்கு பாதகத்தை ஏற்படுத்தியதாகவும் - திஸ்ஸ அத்தநாயக்க குற்றஞ்சாட்டினார்.

## அகதிகளை அழைத்துவர உதவுமாறு யு.என்.எச்.சி.ஆரிடம் கோரிக்கை

இந்தியாவில் தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அழைத்து வருவதற்கு உதவுமாறு, ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

இந்தியாவில் தங்கியுள்ள அகதிகளில் பெருமளவானோர் இலங்கைக்குத் திரும்புவதற்கு விருப்பம் கொண்டுள்ளனர். எனவே, இவர்களை இலங்கைக்கு அழைத்துவருவதற்குரிய படகு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போதைய நிலையில் உயிராபத்துக்கு மத்தியில் இந்தியாவிலிருந்து தலைமன்னாருக்கு திரும்புவதற்கு ஒவ்வொருவரும் 1000 ரூபா முதல் 7500 ரூபா வரை செலுத்த வேண்டி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# இன்ஸ்பெக்டர் பதவி உயர்வுகளை உயர் நீதிமன்றம் இடைநிறுத்தியது

பொலிஸ் இன்ஸ்பெக்டர்களுக்கு பொலிஸ் ஆணைக்குழுவால் வழங்கப்பட்டுள்ள பதவியுயர்வுகள் யாவும் உயர்நீதிமன்றத்தால் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

18 பொலிஸார் தாக்கல் செய்த மனுவின் அடிப்படையிலேயே இந்த உத்தரவு நேற்றுமுன்தினம் பிறப்பிக்கப்பட்டது.

பொல்கொட கொலைகள் மற்றும் கொபேஹன பெண் கொலை என்பவற்றில் குற்றம் சுமத்தப்பட்டு, மரண தண்டணை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள பொலிஸாருக்கு இன்ஸ்பெக்டர் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளதாக மனுத்தாரர்கள் தமது மனுவில் சுட்டிக்காட்டியிருந்தனர்.

தனது தீர்ப்பின்போது பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா - சுயாதன பொலிஸ் ஆணைக்குழுவின் இவ்வாறான செயற்பாடுகள் அந்த ஆணைக்குழுவின் மீதுள்ள நம்பிக்கையை இழக்க செய்துள்ளதாக குறிப்பிட்டார். (01)

## புலனாய்வாளரை கைகழுவும்

# அரசாங்கத்தின் போக்கு குறித்து தமிழ் ஆயுதக்குழுவினர் விசனம்

(கொழும்பு)

இராணுவப் புலனாய்வுத்துறையுடன் இணைந்த பல்வேறு முக்கிய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டவர்களை அரசாங்கமும், படைத்தரப்பும் தம்முடன் எந்தத் தொடர்பும் இல்லாதவர்கள் என்று கைகழுவிட்டமை -

இராணுவப் புலனாய்வுத்துறையுடன் இணைந்து செயற்படும் தமிழ் ஆயுதக் குழுவினரைப் பெரிதும் விசனத்துக்குள்ளாக்கியிருப்பதாகத் தகவல்கள் தெரிவித்தன.

அண்மையில் கொல்லப்பட்ட புலனாய்வுத்துறை அதிகாரியான நீல் தம்மிக மற்றும் இராணுவத்தில் கப்டன் தரத்தில் கணிக்கப்பட்ட புளொட் மோகன் ஆகியோருடன் தமக்கு எந்தவிதத் தொடர்புமில்லையென அரசு அடியோடு மறுத்திருந்தது.

இந்தச் சம்பவம் அரசுடன் இணைந்து செயற்படும் ஆயுததாரிகளிடையே பலத்த கலகத்தையும், அரசின் போக்கில் மீதான விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் ஆயுதக் குழுவொன்றின் உறுப்பினர் - அரசு மேற்கொள்ளும் காரியம் மிகவும் கீழ்த்தரமானது எனவும், நம்பவைத்து மோசடி செய்யும் ஒரு காரியம் எனவும் குறிப்பிட்டார்.

அரசின் சம்பளப் பட்டியலில், சம்பளம் பெறும் நபர்களை இவ்வாறு தவிர்ப்பதன் மூலம் அவர்களுக்கான காப்புறுதி மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை தட்டிக்கழிக்க முயலும் அரசு - இந்த நபர்களின் சேவையை, இந்தச் செயல்மூலம் களங்கப்படுத்துகிறது எனவும் தெரிவித்தார்.

இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும்போது தாம் தமிழர்களின் ஆதரவை இழக்கிறோம் என்பதைத் தெரிந்தும் இவ்வாறு செயற்பட முன்வந்தவர்களுக்கு அரசு தரும் பரிசு இதுதான் என்பதை, தம்மால் உணர முடிவதாகவும், இராணுவத்துடன் சேர்ந்து தமிழர்களுக்கெதிரான வேலைகளைச் செய்வதையே ஜனநாயக வழிக்குத் திரும்புகிறோம் என்று சொல்லிக்கொள்ளும் தமக்கும் இதேகதிதான் ஒரு நாள் நடைபெறும் என்றும் அவர் கருதது வெளியிட்டார்.

# சுங்க அதிகாரிகளுக்கு பேட்டியளிக்கத் தடை!

(கொழும்பு)

சுங்க அதிகாரிகள் ஊடகங்களுக்கு பேட்டியளிப்பது தடை செய்யப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இதனை நிதியமைச்சின் பேச்சாளர் உறுதிப்படுத்தியதுடன், சுங்க அதிகாரிகள் ஊடகங்களுக்கு பேட்டியளிப்பது தடை செய்யப்படுவதாக, சுற்றறிக்கை நிதியமைச்சு மூலம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தங்க நாணயங்கள் இறக்குமதி செய்யப்பட்டது தொடர்பாக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் விசாரணையை மேற்கொண்டவேளை - அவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

அத்துடன், இந்த விசாரணையை மேற்கொண்ட மேலும் ஐந்து சுங்க அதிகாரிகளுக்கும் விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தலை அடுத்து, இவர்கள் அனைவரும் தமது பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு நாட்டைவிட்டு வெளியேறிவிட்டனர்.

இதனையடுத்தே, நிதியமைச்சு சுங்க அதிகாரிகளின் பாதுகாப்புக் கருதி இந்த சுற்றறிக்கையை அனுப்பி வைத்துள்ளது.

# வெளிநாட்டுப் படைகளுக்கு பயிற்சியளிக்கும் தகுதி இலங்கை இராணுவத்துக்கு உள்ளதா?

### கொழும்புப் பத்திரிகை கேள்வி எழுப்புகிறது

இலங்கை இராணுவம் வெளிநாட் டுப் படைகளுக்குப் பயிற்சியளிக்கும் தகுதியைப் பெற்றுள்ளதா? என தென்னிலங்கைப் பத்திரிகையொன்று கேள்வி எழுப்பியுள்ளது.

உலகில் பாரிய கொரில்லா இயக்கமாகத் திகழும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பாரிய யுத்தங்களில் ஈடுபட்ட அனுபவங்களைப் பெற்றுள்ள இலங்கை இராணுவத்தை, பிறநாட்டு இராணுவங்களுக்கு பயிற்சியளிக்கும் பட்டியலில் ஐக்கிய நாடுகளின் அமைதிப் படைப்பிரிவு சேர்த்துள்ளது.

இதன் முதற்கட்டமாக இந்த மாதம் இறுதிப்பகுதியில் 23 நாடுகளைச் சேர்ந்த ஐ.நா.அமைதிப்படை இராணுவத்தினருக்கு இலங்கையில் பயிற்சியளிக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சியை இலங்கை இராணுவத்தின் உயர்பீடம் வழங்கவுள்ளது. இவ்வாறு பயிற்சியளிக்கும் அதிகாரிகள் - இலங்கை இராணுவத்தில் நீண்டகாலம் சேவையாற்றியதுடன், பலகாலங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போராட்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகளை முழுமையாக வெற்றிகொள்ளப்படாத நிலையில், புலிகளிடம் பல சந்தர்ப்பங்களில் தோல்விகளைச் சந்தித்த நிலையில இலங்கை இராணுவத்தினர் இந்தப் பயிற்சிக்குத் தெரிவாகியிருப்பது எந்த வகையில் தகுதியானது என்பது கேள்விக்கிடமாகியுள்ளதென அந்தப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போலி அடையாள அட்டை விவகாரம்

# முன்னாள் ஆட்பதிவு ஆணையாளரை குற்றப் புலனாய்வுப் பொலிஸார் விசாரணை

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி, தேசிய அடையாள அட்டை வழங்கியமை தொடர்பாக, ஆட்பதிவுத்திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளரிடம் குற்றப்புலனாய்வுப்பிரிவுப் பொலிஸார் நேற்றுமுன்தினம் விரிவான விசாரணைகளை மேற்கொண்டனர்.

ஆட்பதிவுத்திணைக்கள முன்னாள் ஆணையாளர் நாயகத்தை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் ஆஜராகுமாறு ஏற்கனவே பணிக்கப்பட்டிருந்ததாக திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன்படி, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜரான முன்னாள் ஆணையாளர் - மூன்றுமணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

கொள்ளுப்பிட்டிப் பொலிஸ் நிலையத்தில் அண்மையில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுதாக்குதல் சம்பவத்தை அடுத்து, போலி அடையாள அட்டைகள் விநியோகிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பந்தமாக சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட யுவதி அளித்த வாக்கு மூலத்தின் பிரகாரம், தாக்குதலில் உயிரிழந்த யுவதி - போலி அடங்கிய அடையாள அட்டையை பெற்றுக்கொண்டிருந்தமை தெரிய வந்தது.

# சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு மீது நாடாளுமன்றில் கடும் தாக்குதல்!

## பதவி விலகுமாறும் கோரிக்கை

பொலிஸ் ஆணைக்குழு பதவி வலக வேண்டுமென அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஒத்திவைப்பு விவாதத்தில் பங்கேற்ற அவர்- நடைமுறையில் இந்த ஆணைக்குழு முறையற்ற வகையில் நடந்துகொள்வதாக குற்றஞ்சுமத்தினார்.

விவாதத்தில் உரையாற்றிய தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் இலங்கை பொலிஸ் - தமிழ் மக்களைத் தமது எதிரிகளாகவே நடத்துகின்றனர்.

இரண்டு அரசாங்கங்களின் ஆட்சியின்போதும், இந்த நிலையே காணப்படுகிறது.


காஞ்சிரங்குடாவில் பொலிஸார் நடந்துகொண்டவிதம், திருகோணமலையில் இடம்பெற்ற குண்டுவீச்சு என்பவை தொடர்பாக பொலிஸ் ஆணைக்குழு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றும் அவர் தெரிவித்தார். விவாதத்தில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் - பொலிஸ் மா அதிபரின் நியமனம்கூட, சட்டவிரோதமானது எனத் தெரிவித்தார்.

ஹிங்குராங்கொட பபுல விஹாரையில், ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் விடயத்தில், பொலிஸ் சுயாதீன ஆணைக்குழு நியாயமாக நடந்து கொள்ளவில்லை எனவும் அவர் குற்றஞ்சுமத்தினார்.

இன்னும் 08 நாட்களில்




# பரிதி வட்டம் வீசுதல் போட்டியில் ஹாட்லி மாணவன் சாதனை!


த. கிருபாகரன்


த. சுஜீவன்

(நெல்லியடி)

வடக்கு - கிழக்கு மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான 2004 ஆம் ஆண்டுக்கான மெய்வல்லுனர் போட்டியில் பரிதி வட்டம் வீசுவதில் ஹாட்லிக் கல்லூரி மாணவன் தவராஜசிங்கம் கிருபாகரன் புதிய சாதனை படைத்திருக்கிறார்.

15 வயதுக்குட்பட்ட பிரிவில் இவர் 34.4 மீற்றர் தூரத்துக்கு பரிதி வட்டம் வீசி புதிய சாதனை நிலை நாட்டினார்.

இதேவேளை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த தவத்துரைராசா சுஜீவன் இந்த வயதுப் பிரிவில் மாகாணமட்டத்தில் தடைதாண்டல் போட்டியில் மூன்றாமிடத்தைப் பெற்றார். (12)

# பாகிஸ்தானில் 2 டெஸ்ட் போட்டிகளில் இலங்கை அணி விளையாடவுள்ளது

இலங்கை கிரிக்கெட் அணி, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்து இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

முன்னதாக டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்க இலங்கை அணி அனுமதி வழங்கவில்லை. பங்களாதேஷுடனான போட்டியில் கலந்துகொள்வதற்காகவே இலங்கை அணி, டெஸ்ட் போட்டியில் பங்குகொள்ள மறுத்துவிட்டது.

முதலாவது டெஸ்ட் போட்டி ஒக்ரோபர் 20 ஆம் திகதி ஆரம்பமாகும்.


இதற்கு முன்னர் இலங்கை - பாகிஸ்தான் - சிம்பாப்வே அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது. ஒருநாள் போட்டித் தொடர் ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் 16 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தென்னாபிரிக்காவுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 279 ஓட்டங்கள்!

(கொழும்பு)

தென்னாபிரிக்க அணிக்கெதிராக காலியில் நேற்று ஆரம்பமான முதலாவது டெஸ்ட் போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை அணி நேற்றைய ஆட்டநேர முடிவின்போது, 7 விக்கெட் இழப்புக்கு 279 ஓட்டங்களை எடுத்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. தொடக்க வீரர்களாகக் களமிறங்கிய அத்தப்பத்து - ஜெயசூரிய ஜோடி நிதானமாக ஆட முற்பட்டபோதும் குறுகிய நேரத்துக்குள்ளேயே அடுத்தடுத்து ஆட்டமிழக்க நேர்ந்தது.




பொலக் வீசிய பந்துகளில், இவர்கள் இருவரும் ஆட்டமிழந்தனர். அத்தப்பத்து இரு பவுண்டரிகளுடன் 9 ஓட்டங்களையும் ஜெயசூரிய ஒரு பவுண்டரியுடன் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

22 ஓட்டங்களை இலங்கை அணி பெற்ற நிலையில் இரண்டு விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து நெருக்கடியான கட்டத்திலிருந்தபோது சங்ககாரவும் ஜெயவர்த்தனவும் களமிறங்கினர்.



இருவரும் நிலைத்துநின்று ஆடி, அணியைத் தூக்கி நிறுத்தினர். சங்ககார, மதிய உணவு இடைவேளைக்குப் பின்னர் போஜேயின் பந்துவீச்சில் பௌச்சரிடம் பிடிகொடுத்து ஆட்ட மிழந்தார்.



இவர் 65 பந்துகளில் பதினொரு பவுண்டரிகளுடன் 58 ஓட்டங்களைப் பெற்றார். இதன் பின்னர் ஆடுகளம் வந்த சமரவீரவும் விரைவிலேயே பொலக்கின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்தார்.

34 பந்துகளை எதிர்கொண்ட சமரவீர 13 ஓட்டங்களைப் பெற்றார்.

பின்னர் ஜெயவர்த்தனவுடன் ஜோடி சேர்ந்த டில்சான் பொறுமையாக நின்று ஆடிக்கொண்டிருந்தார். இவர் 64 பந்துகளில் 25 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஹெய்வோர்ட்டின் பந்துவீச்சில் போல்டானார்.

இதையடுத்து களமிறங்கிய களுவிதாரண ஓரளவுக்கு ஓட்டங்களைக் குவித்துக்கொண்டிருந்தார்.

எனினும் 78 பந்துகளில் நான்கு பவுண்டரிகளுடன் 35 ஓட்டங்களைப் பெற்றிருந்த களுவிதாரண பொலக்கின் பந்துவீச்சில் போல்டானார்.

அடுத்ததாக வந்த உபுல்சந்தன, ஆட்டநேர இறுதியில் - என்ரினியிடம் தனது விக்கெட்டைப் பறிகொடுத்தார். இவர் ஏழு பந்துகளில் 5 ஓட்டங்களைப் பெற்றார்.

90 ஓவர்கள் நிறைவில் முதலாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டபோது இலங்கை அணி 7 விக்கெட் இழப்புக்கு 279 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் எட்டு உதிரி ஓட்டங்களாகும்.

இலங்கை அணி வீரர் மஹேல ஜெயவர்த்தன இறுதிவரை ஆட்டமிழக்காமல் 116 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இவர் 249 பந்துகளை எதிர்கொண்டு 15 பவுணடரிகள், ஒரு சிக்ஸருடன் இந்த ஓட்டங்களைப் பெற்றார்.



இது ஜெயவாத்தனவின் 12 ஆவது டெஸ்ட் சதம் என்பது குறிப்பிடத்தக்கது. பந்துவீச்சில் பொலக் 4 விக்கெட்டுக்கள், என்ரினி, ஹெய்வோட், போஜே ஆகியோரார் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

# மீண்டும் உலகசாதனை படைக்க முத்தையா முரளிதரனுக்கு வாய்ப்பு!



தென்னாபிரிக்க அணிக்கெதிராக காலியில் நேற்று ஆரம்பமான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் விக்கெட்டுக்களின் எண்ணிக்கையில் ஷேன்வோர்னை முந்தி மீண்டும் உலகசாதனை படைப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

டெஸ்ட் போட்டிகளில் விக்கெட்டுக்களின் எண்ணிக்கையில் இலங்கையின் முத்தையா முரளிதரனும், அவுஸ்ரேலிய அணியின் ஷேன்வோர்னும் முதலிடத்தில் உள்ளனர்.

இவர்கள் இருவருமே 527 விக்கெட்டுக்களை எடுத்து உலகசாதனையைப் பங்குபோட்டுக் கொண்டுள்ளனர்.

சென்ற மாதம் அவுஸ்ரேலியாவில் நடைபெற்ற இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை முரளிதரன் புறக்கணித்துவிட்டார். அவரது பந்துவீச்சு முறையாக இல்லையென்றும், அவர் பந்தை எறிகிறார் என்றும் அவுஸ்ரேலிய பிரதமர் ஜோன் ஹோவார்ட் குற்றம் சாட்டியதை அடுத்து, அவுஸ்ரேலிய அணிக்கெதிரான தொடரிலிருந்து விலகிக்கொண்டார் முரளிதரன்.

எனவே, அவருடைய சாதனையை சமன்செய்யும் வாய்ப்பு ஷேன் வோர்னுக்குக் கிட்டியது.

தென்னாபிரிக்க அணி இலங்கையில் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையேயான இரண்டாவது டெஸ்ட்போட்டி வரும் 16 ஆம் திகதியன்று கொழும்பில் ஆரம்பமாகும்.

காலியில் இதுவரை பத்து டெஸ்ட் போட்டிகளில் பந்துவீசியுள்ள முரளிதரன், அவற்றில் 82 விக்கெட்டுக்களை வீழ்த்தி அசத்தியிருக்கிறார். அந்தப் பத்துப் போட்டிகளில் இலங்கை ஆறில் வெற்றிபெற்றுள்ளது. இரண்டில் தோல்வியடைந்துள்ளது. இரண்டு போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன.

தென்னாபிரிக்க அணிக்கெதிராக இதுவரை 13 டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ள இலங்கை அணி, ஒரேயொரு வெற்றியை மட்டுமே பெற்றது. அந்த ஒரு வெற்றியும் காலி மைதானத்தில்தான் ஈட்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தென்னாபிரிக்க அணி - இலங்கை அணிக்கெதிராக இதுவரை எட்டுப் போட்டிகளில் வெற்றியடைந்துள்ளது. எஞ்சிய நான்கு போட்டிகள் சமனாக முடிவடைந்துள்ளன.

கடந்த பெப்ரவரியில் நியூஸிலாந்தில் அந்த அணிக்கெதிரான டெஸ்ட்



தொடரில் ஆடியது தென்னாபிரிக்க அணி. அதன்பின்னர் ஐந்து மாத கால இடைவெளிக்குப் பின்னர் தற்போது இலங்கையில் அது விளையாடுகின்றது.

நியூஸிலாந்துடனான டெஸ்ட் தொடரை 1-1 என்ற கணக்கில் சமன்செய்தது தென்னாபிரிக்க அணி.

இலங்கை அணியை அதன் சொந்த மண்ணில் எதிர்கொள்வது கடினமான சவால்தான் என்று ஒப்புக்கொண்ட தென்னாபிரிக்க அணித் தலைவர் கிரேம் ஸ்மித், இருப்பினும் தங்கள் அணியின் வீரர்கள் முழுத் திறமையையும் வெளிப்படுத்தி ஆடுவார்கள் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.




# தாச்சி சுற்றுப்போட்டியில் இன்று!

யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் 2004 ஆம் ஆண்டுக்கான மாபெரும் தாச்சிச் சுற்றுப்போட்டிகளில் இன்று - பிற்பகல் 5 மணிக்கு கைதடி மதிஒளி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நவாலி தென்றல் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

இப்போட்டி சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும்.

# இன்னும் சூடுபிடிக்காத ஒலிம்பிக் டிக்கெட் விற்பனை!

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகள் தொடங்க இன்னும் 8 நாடகளே உள்ள நிலையில் மொத்தமுள்ள 53 லட்சம் டிக்கெட்டுகளில் 22 இலட்சம் டிக்கெட்டுகள் மட்டுமே இதுவரை விற்கப்பட்டுளளன.

போட்டித் திகதி நெருங்க நெருங்க, கிரீஸ் மக்கள் டிக்கெட்டுகளை அதிகளவில் வாங்குவார்கள் என்று போட்டி அமைப்பாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

28 விளையாட்டுகளில் 301 பிரிவுகளில் போட்டிகள் நடைபெறுகின்றன.

பல்வேறு போட்டிகளுக்காக அரை இறுதி, இறுதிப் போட்டிகளுக்காக டிக்கெட்டுகள் 87 சதவீதமளவுக்கு விற்பனையாகியுள்ளதாக அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஆசியக் கிண்ண உதைபந்தாட்டம் இறுதிப் போட்டிக்கு ஜப்பான் தகுதி!

(பீஜிங்)

சீனாவில் நடைபெற்று வரும் ஆசியக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியில் விளையாட நடப்புச் சம்பியனான ஜப்பான் அணி தகுதி பெற்றுள்ளது.



கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மிகவும் பரபரப்பான அரையிறுதி ஆட்டத்தில் கூடுதல் நேரத்தில் அடித்த கோல் மூலம் 4-3 என்ற கணக்கில் பக்ரைன் அணியை ஜப்பான் வெற்றி கொண்டது.

இதன்மூலம் 12 ஆண்டுகளில் மூன்றாவது முறையாக பட்டம் வெல்லும் வாய்ப்பைப் பெற்றுள்ளது ஜப்பான்.

திங்கட்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் மிகவும் வலுவிழந்த பக்ரைன் அணியுடன் கடுமையாகப் போராடியது ஜப்பான்.

மூன்று முறை முன்னிலை பெற்றும் ஆட்டநேர இறுதியில் இரு அணிகளும் தலா 3 கோல்கள் அடித்து சமநிலை உருவாகியது.

ஆட்ட நேரம் முடிவடையும் நேரத்தில் ஜப்பான் வீரர் யூஜி நகாஜவா அடித்த கோல் மூலம் கூடுதல் நேரம் கிடைத்தது. கூடுதல் நேரத்தில் ஜப்பானின் கெய்ஜி தமாடா கோலடித்து அணிக்கு வெற்றியைத் தேடித் தந்தார்.மற்றொரு அரை இறுதியில் சீனாவும் ஈரானும் மோதவுள்ளன.

# உள்ளூராட்சி மன்ற சகல விடயங்களையும் ஒவ்வொரு பொதுமகனும் அறிந்திருக்க வேண்டும்

## வட - கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவிப்பு

(மானிப்பாய்)

நாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் சிறந்த முறையில் மக்களுக்குச் சேவையாற்றி வருகின்றன. அந்த வகையில் வடக்கு - கிழக்கு உள்ளூராட்சிச் சபைகளில், வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபை மக்களுக்கு மிகச் சிறப்பாக பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை வரையறுத்து, அதன் வழியாக அனைத்து மக்களுக்கும் குறிப்பாக கீழ்மட்ட மக்களுக்கு சிறந்த சேவையாற்றி வருவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன் என பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் இராசையா தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமையன்று மானிப்பாய் பிரதேச சபையில் நடைபெற்ற உள்ளூராட்சிவார இறுதிநாள் பரிசளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்-

உள்ளூராட்சி மன்றங்களின் சபை விடயங்களை ஒவ்வொரு தனி மனிதனும் அறிந்திருக்கவேண்டும். அந்தச் சேவைகள், மக்களை விரைவாகச் சென்றடையவேண்டும்.

சகல உள்ளூராட்சி மன்றங்களும் மக்களுக்கு உதவும் வகையில் செயற்பட்டு, மக்களின் மத்தியில் அவர்களுடைய பிரதேசத்தின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை அறிந்து, துரிதமாகச் செயலாற்றவேண்டும்.

கடந்த வருடம் மானிப்பாய் பிரதேசசபை முன்வைத்த முன்மொழிவுகளைச் சி.பி.ஜி., பி.எஸ். டி.ஜி., எம்.ஆர்.ஆர் மற்றும் சபை நிதியின் ஊடாகப் பிரதேசத்தின் தேவைகளை நடைமுறைப்படுத்தி, மக்களின் தேவைகளை அறிந்து செயலாற்றி சிறந்த அபிவிருத்தியை அடைந்துள்ளதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்வாறு மானிப்பாய் பிரதேச சபை மேன்மேலும் மக்களுக்காகச் சேவையாற்றி - மக்கள் அபிவிருத்தி அடையவும், பிரதேசம் வளர்ச்சியடையவும் உள்ளூராட்சித் திணைக்களத்தின் சார்பில் வாழ்த்துக்கள்

எனது பிராந்திய சபைகளில் பிரதேசத்தின் ஜனநாயக விழுமியங்களைப் பேணி, மக்கள் சேவையை மகேசன் சேவையாகக் கொண்டு வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபை இயங்கி வருவதோடு, உள்ளூராட்சி வாரத்தை மிகச் சிறப்பாகத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி வருகிறது.

இந்தப் பிரதேச சபையின் நான்கு உப அலுவலகங்களும் பேண்தகு அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு இந்த உள்ளூராட்சி வார காலத்தில் பல்வேறுபட்ட சேவைகளை மிக அர்ப்பணிப்புடன் தமது நிர்வாக அலுவல்களைக் கொண்டு மேற்கொண்டு வருகின்றதென அவா மேலும் தெரிவித்தார்.

மானிப்பாய் பிரதேச சபையின் செயலாளர் பி.விக்டர் உரையாற்றும் போது -

'கருவிலிருந்து கல்லறை வரை' என்ற மகுட வாக்கியத்தைக் கொண்டு எமது சபை செயற்பட்டு வருகின்றது என்றார்.

இந்த உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு - குடிநீர், சுகாதாரம், நூலக அபிவிருத்தி, மயான சேவைகள், விளையாட்டுப் போட்டிகள், சிரமதானங்கள், வீதி அபிவிருத்தி மற்றும் கட்டாக்காலி நாய்கள் பிடித்தல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்துச் செயற்படுத்தி வருகிறது.

அத்துடன், காக்கைதீவு, கட்டுடை ஆகிய இடங்களில் குடிநீர் பாவனையாளர் சங்கம் அமைத்தல் போன்றவற்றில் சண்டிலிப்பாய் பிரதேச செயலருடன் இணைந்து திட்டங்களை முன்வைத்து நிகழ்ச்சிகளையும் செயலாற்றி வருகிறது என்று அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சிக்கு வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் றெஜினா இருதயநாதன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சுப்பிரமணிய சர்மா, மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி வர்ணநாதன், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் நூற்றுக்கணக்கான பொது மக்களும் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.

(100)

### அராலி இந்து மாணவி மூன்றாம் இடம்

வடக்கு - கிழக்கு மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் யாழ்.அராலி இந்துக் கல்லூரி மாணவி செல்வராசா நுஜந்திக்கா, 17 வயதின்கீழ் பிரிவிற்கான உயரம் பாய்தலில் மூன்றாம் இடத்தைப் பெற்று, அனைவரதும் பாராட்டைப் பெற்றுள்ளார்.

இந்தப் போட்டி அண் மையில் திருகோணமலையில் நடைபெற்றது. இந்த மாணவி யாழ். மாவட்ட மட்டப் போட்டியிலும் முத லாமிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(118)


### பௌதீக கதிரியக்க சிகிச்சை கருத்தரங்கு

(மானிப்பாய்)


பௌதிக கதிரியக்க சிகிச்சை பற்றிய கருத்தரங்கு ஒன்று இன்று மாலை 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் மகேஸ்வரன் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக, யாழ். விஞ்ஞான சங்கத்தின் செயலாளர் கலாநிதி பிறின்ஸ்ஜெயதேவன் தெரிவித்தார்.

இந்தச் சிகிச்சை பற்றிய கருத்தரங்கு அமெரிக்கா லுவியோ - மவுண்ட் காமல் மருத்துவ நிலையத்திலிருந்து வருகை தந்துள்ள கலாநிதி டொக்டர் தவேந்திரராஜாவினால் நடத்தப்பட இருப்பதாக விஞ்ஞான சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார்.

(100)



மெலிஞ்சிமுனை றோ.க.த.க. வித்தியாலய மாணவர்களுக்கு - அண்மையில் கியூடெக் நிறுவனத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பாடசாலை உபகரணப் பொருட்களை, அருட்தந்தை ஜெயக்குமார் அடிகள் மாணவியொருவருக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம்.



யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி உயர்தர கலைப்பிரிவு மாணவன் சி.சிற்பரன், யுனிசெப் நிறுவனம் நடத்திய மிதிவெடி அபாயக்கல்வி தொடர்பான ஓவியப் போட்டியில் முதலாம் இடத்துக்கான சான்றிதழைப் பெறுவதைக் காணலாம்.

# யாழ். தொழில்நுட்பக் கல்லூரியை தரமுயர்த்த அமைச்சரவை அங்கீகாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியை, தொழில்நுட்பவியல் நிறுவனமாகத் தரமுயர்த்த அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

இதற்கான அங்கீகாரம் கடந்த ஜூன் மாதம் 14 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற போதிலும், யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபருக்குக் கடந்த வாரமே அறிவிக்கப்பட்டுள்ளது.

தரமுயர்த்துவதற்கான முன்னாயத்தமாகவே புனரமைப்புப் பணிகளும், பதிய கட்டடங்கள் நிறுவும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டதாக தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபரும், பிராந்தியப் பணிப்பாளருமான என்.யோகராஜன் தெரிவித்தார்.

புதிய பல பாடங்கள் அறிமுகப் படுத்தப்படவுள்ளதால், புதிய கட்டடங்கள் பல அமைக்கப்படவுள்ளன. இதற்காக கொரியாவால் 2.38 மில்லியன் அமெரிக்க டொலர்கள் யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு வழங்கப்படவுள்ளது.

கொரியாவால் வழங்கப்படவுள்ள 2.38 மில்லியன் அமெரிக்க டொலர் நிதிக்குப் பதிலாக, அதே தொகை பெறுமதி கொண்ட தொழில்நுட்ப இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

கட்டட அமைப்புகான நிதியை இலங்கை அரசு வழங்கவுள்ளதென தொழில்நுட்பக்கல்லூரியின் அதிபர் மேலும் தெரிவித்தார்.

(ப)

# ஆசிரியர் தினத்தை முன்னிட்டு எழுத்தாக்கப் போட்டிகள்

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இடம்பெறவுள்ள ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, வடக்கு - கிழக்கு பகுதியில் தமிழ்மொழி மூலமான ஆசிரியர்களுக்கு இடையான எழுத்தாக்கப் போட்டிகளை நடத்துவதற்கான நடவடிக்கைகளை தமிழீழ கல்விக்கழகம் மேற்கொண்டு வருகின்றது.

இதற்கமைய ஆசிரியர்களிடையே கட்டுரை, சிறுகதை, கவிதை, விமர்சனம் எழுதுதல் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கவிதைப் போட்டியில் பங்குபற்றும் ஆசிரியர்கள் - 'சுவாமி விபுலானந்தரின் கல்விப் பணி' என்னும் தலைப்பிலும், சிறுகதைப் போட்டியில் பங்குபற்றுவோர்- தமிழீழ கல்விப் புலம் சமகால விடயங்களை உள்ளடக்கியதாகவும், சிறுகதைகளை அமைத்தல் வேண்டும்.

விமர்சனப் போட்டியில் பங்குபற்றுவோர் மீண்டும் வெளிவந்த 'விளக்கு' சஞ்சிகை பற்றி விமர்சனங்களை எழுதுதல் வேண்டும்.

கட்டுரை, சிறுகதை, விமர்சனம் என்பன A4 தாளில் மூன்று பக்கங்களுக்கு மேற்படாதவையாகவும், கவிதைகள் மரபுக்கவிதையாயின் 24 வரிகளுக்கு மேற்படாமலும், புதுக்கவிதையாயின் 40 வரிகளுக்கு மேற்படாமலும் அமைத்தல் வேண்டும்.

கட்டுரைப் போட்டி மற்றும் சிறுகதைப் போட்டிகளுக்கு முதலாம் இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுவோர்களுக்கு முறையே 10 ஆயிரம் ரூபா, 7500 ரூபா, 5 ஆயிரம் ரூபா பணப் பரிசு வழங்கப்படவுள்ளது.

கவிதை மற்றும் விமர்சனப் போட்டிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே 5ஆயிரம் ரூபா, 3ஆயிரம் ரூபா, 2 ஆயிரம் ரூபா, பரிசாக வழங்கப்படும்.

# வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 8 ஆம், 9ஆம், 10 ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுகளின் போது பேராளர்களின் சொற்பொழிவுகள், இலக்கியக் கலைநிகழ்சிகள், விருது வழங்கும் வைபவங்கள் என்பன இடம்பெறவுள்ளன.

தமிழ் மொழிக்கு அருந் தொண்டாற்றிய பெரியார்களது வேடப் புனைவுப் போட்டிகளும் இடம் பெறவுள்ளன.

இந்த வகையில் வள்ளுவர், பாரதியார், விபுலானந்த அடிகள், நல்லூர் சின்னத்தம்பிப் புலவர், மன்னர்களான - சங்கிலியன், பண்டாரவன்னியன் மற்றும் ஆறுமுகநாவலர், ஔவையார், உமறுப் புலவர், கம்பர், சித்திலெவ்வை, சுவாமி விவேகானந்தர், தனிநாயகம் அடிகளார், பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் வித்தியானந்தன், சுவாமி விபுலானந்தர், சுவாமி ஞானப்பிரகாசர், பாரதிதாசன், போன்றோருடைய வேடங்களை ஒவ்வொரு பாடசாலைகளில் இருந்தும் இருவர் புனையலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுகளின் போது, தமிழ்த்தாய், தமிழர் பண்பாடு, சிலப்பதிகாரக் காட்சிகள், மகாபாரதக் காட்சிகள், இன்றைய பண்பாட்டு நிகழ்வுகள் போன்றவற்றைச் சித்தரிக்கும் ஊர்திப் பவனிகளும் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் பங்குபற்ற பிறமாவட்டங்களில் இருந்து வருவோருக்கு தங்குமிட வசதிகள், உணவு வசதிகள் வழங்கப்படும் எனவும் கல்வி வலய நிர்வாக உத்தியோகத்தர் பூ.புலேந்திரராசா தெரிவித்தார்.

(லெ)

### 780 இலக்க பஸ்சேவை சீரில்லை

யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறைக்கு இடையே சேவையில் ஈடுபடும் 780 இலக்க வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் சேவை சீராக நடைபெறுவதில்லை. இதனால், உத்தியோகத்தர்கள், மாணவர்கள் உட்பட அனைவரும் சிரமத்தை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைகளை ஊடறுத்துச் செல்லும் பிரதான வீதிகள் கடற்படையினரால் மூடப்பட்டுள்ளதால், அயல் பாடசாலைகளுக்கும் பஸ் மூலமே போக்குவரத்துச் செய்ய வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(61)

# ஆசிரிய ஆலோசகர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

தென்மராட்சி கல்வி வலயத்தில் கடமையாற்றும் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I அல்லது வகுப்பு 2 தரம் I ஐச் சேர்ந்த ஆசிரியர்களிடமிருந்து - விவசாயம், சங்கீதம், வர்த்தகமும் கணக்கியலும், சித்திரம், சிங்களம் ஆகிய பாடங்களுக்கும், விசேட கல்வி, ஆலோசனை வழங்கலும் வழிகாட்டலும் ஆகிய துறைகளுக்கும், ஆசிரிய ஆலோசகர் பணிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள்- விண்ணப்பிக்கும் பாடத்தை ஒரு பாடமாகக் கொண்டு பட்டம் பெற்றிருப்பதோடு, தரம் 6 - 11 வரையான வகுப்புகளில் ஐந்து வருடத்துக்குக் குறையாத கற்பித்தல் அனுபவத்துடன் பட்டப்பின் கல்விச் சான்றிதழ் பெற்றவராக்வும் இருத்தல் வேண்டும்.

அல்லது விண்ணப்பிக்கும் பாடத்தில் பயிற்சி பெற்றிருப்பதோடு, பத்து வருடங்களுக்குக் குறையாத கற்பித்தல் அனுபவம் இருத்தல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலோசனை வழங்கலும், வழிகாட்டலும் ஆசிரிய ஆலோசகர் பணிநிலைக்கு விண்ணப்பிப்பவர்கள்- பட்டதாரிகளாகவும், பட்டப்பின் கல்விச் சான்றிதழ் பெற்றவர்களாகவும் இருக்கவேண்டும் என்பதுடன்

விண்ணப்பங்கள் யாவும், எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் தென்மராட்சி வலயக் கல்வித் திணைக்களத்துக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

(31)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : ப.சுபன்

முகவரி : சேமன் வீதி, கரவெட்டி

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :--------------------

முகவரி :--------------------

பிறந்த ஆண்டு:--------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------

பெற்றோர் ஒப்பம்



# தொழில் மலர்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

ஒரு விடயத்தைத் திட்டமிட்ட முறையில் நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் தோன்றுமானால், அந்த விடயங்கள் குறித்து சுருக்கமான விளக்கங்கள், பயிற்சி அளிப்பது முக்கியமாகும்.

**பரிசீலனை செய்தல்**

எதிர்பார்த்தபடி விளைவுகள் அமைகின்றனவா? என்பதை இலக்குகளுடன் ஒப்பிட்டு விலகல்கள் அவதானிக்கப்பட வேண்டும்.

**நடவடிக்கை**

எதிர்பார்த்தபடி முன்னேற்றங்கள் ஏற்படாத விடத்து, குறித்த தரச்சுற்று நடவடிக்கைகள் பயன் தரவில்லை என்பதைக் கண்டறிந்து, மீண்டும் அதே குழுவினர் முதலாவது படியாகிய திட்டமிடலுக்குச் செல்லுதல் வேண்டும். இவ்வாறு மீண்டும் விவாதம் ஏற்படுகின்றபோது, எந்தப் பகுதியில் குறைபாடு ஏற்பட்டது என்ற உண்மைகள் வெளிவரும்.

இலக்குகளை உடனடியாக அடைய முடியாது. எனவே, தரச்சுற்றுப் படிமுறையில் கூட்டங்கள் சிலவற்றை நடாத்துதல் வழமையாகும். பல சந்தர்ப்பங்களில் பிரச்சினைக்குரிய விடயங்கள் குறித்து, எடுத்தவுடன் கூறுவதற்குப் பல பணியாளர்கள் முன்வரமாட்டார்கள். இரண்டாவது, மூன்றாவது சுற்றுக் கூட்டங்களில் இந்த நிலைமை தவிர்க்கப்படலாம்.

உண்மையான பிரச்சினைகளை அடையாளம் காணுவதே தரச்சுற்றில் மிக முக்கியமான பாணியாகும். குறிப்பாக, பரீட்சார்த்தத் திட்டங்களின்போது மிகச் சிறிதாகவும், நிறைவேற்றக் கூடியதாகவும் பிரச்சினைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

**மூளைப் பரிமாற்றத்துக்கான அடிப்படை**

இதனை மூளைப் புயலாடல் என்றும் அழைக்கின்றனர். ஒரு பிரச்சினை தரும் விடயம் தொடர்பில் பொருத்தமானவர்கள் ஒன்றுகூடி அந்தப் பிரச்சினையைப் பல்வேறு முறையில் அணுகுவதே இந்த மூளைப் புயலாடல் முறையாகும். இதன்படி ஒவ்வொரு கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கப்படுகிறது. அந்தக் கருத்துக்களை மீளவும் கலந்தாலோசிக்கப்பட்டு, மெருகூட்டப்படுகின்றன. இறுதியாகப் பொருத்தமான கருத்து பலராலும் எட்டப்படுகின்றது. இந்தமுறை பின்வருமாறு செயற்படுகிறது.

✷ ஒரு தரப்பை அல்லது விடயத்தை விளக்குதல்,

✷ ஒவ்வொருவருக்கும் ஒழுங்கு முறையான சந்தர்ப்பத்தை வழங்க இடமளித்தல்.

✷ ஒரே நேரத்தில் ஒரே கருத்தை மட்டும் வழங்க அனுமதித்தல்.

# தொழில் நிறுவனங்களின் முன்னேற்றத்துக்கு உதவக்கூடிய தரச்சுற்று முகாமை

✷ எவருக்காவது கருத்துக்கள் தோன்றாவிட்டால், அடுத்தவருக்குச் சந்தர்ப்பம் அளித்தல்.

✷ எந்தவொரு கருத்தையும் தேவையற்றதெனத் தள்ளிவிடலாகாது.

✷ எந்தவொரு கருத்துக் குறித்தும் நகைப்புக்கு இடமளித்தலாகாது.

✷ கூடுதலான புதிய கருத்துக்களைப் பெறமுயற்சித்தல்.

✷ கருத்துக்கள் குறித்துக் கலந்துரையாடலுக்கோ அல்லது மதிப்பீடு செய்வதற்கோ ஆரம்பத்தில் இடமளித்தலாகாது.

✷ கருத்துக்கள் குறித்து விமர்சனம் செய்தலாகாது.

✷ முழுமையான பேச்சுச் சுதந்திரத்தைப் பேணுதல்.

**தரச்சுற்று நடவடிக்கைகள் வெற்றிகரமாக அமைவதற்கு பின்வரும் ஒழுங்கு முறைகளை வகுத்துக்கொள்ளலாம்**

✡ ஒழுங்கு முறையாக கூட்டங்களுக்கு வருதலை நிச்சயித்தல்.

✡ கருத்துக்களையோ, நபர்களையோ விமர்சனம் செய்யப்படுதல்கூடாது.

✡ குழுவிலுள்ள எல்லோரையும் சமமாகப் பேணுதல்.

✡ நட்புரீதியில் பழகுதலை உறுதிப்படுத்தல்.

✡ தரச்சுற்றுக்கு எடுக்கப்பட்ட விடயங்களை ஒழுங்கு முறையாக விவாதத்துக்கு எடுத்தல்.



**கூட்டத்தின்போது, பின்வரும் செயற்பாடுகளை உறுதிப்படுத்தவேண்டும்**

கூட்டத்தை உரிய நேரத்தில் ஆரம்பித்தல் வேண்டும். நிகழ்ச்சிகளை உரிய நேரத்துக்குள் முடிப்பதில் கவனமாக இருத்தல் வேண்டும்.

கருத்துப் பரிமாற்றங்களுக்குத் தாராளமாக வழிவகுத்தலும், மற்றவர்கள் சொல்வதைக் கேடகும் இயல்பை எல்லோரிடத்தும் ஏற்படுத்தல்.

ஒரே நேரத்தில் ஒரு விடயத்தை ஒட்டியே பேசுவதையும், எல்லாவகையான உரையாடல்களும், குறித்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்தல், ஏற்பட்ட பிரதிபலன்களை அளவிடுதல், குழுவிலுள்ள எல்லோரும் கூட்டத்தில் நடைபெற்ற விடயங்களை மீள்மதிப்பீடு செய்தல். கூட்டத்தில் எய்தப்பட்ட விடயங்கள் சாதகமாக இருத்தலை உறுதிப்படுத்தல்.

**பின்வரும் விடயங்கள் தரச்சுற்றுக் கூட்டத்தின் போது நிகழக்கூடாது.**

✦ விரிவுரைகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

✦ புதிய கருத்துக்கள் அல்லது செயற்பாடுகளைக் கண்டுபிடிப்பதாக அமைதல் வேண்டும்.

✦ குழுவிலுள்ள அங்கத்தவர்களிடையே விவாதம், கருத்துப் புறக்கணிப்பு ஏற்படல் கூடாது.

✦ கருத்துக்களைப் பெறுவதாகவே உரையாடல்கள் அமைதல் வேண்டும்.

✦ ஒருவர் மட்டும் தொடர்ந்து கருத்துக்களை வழங்க இடமளித்தலாகாது. அல்லது கட்டுப்படுத்தும் உரிமையை எவருக்கும் வழங்க இடமளித்தலாகாது.

✦ எல்லா அங்கத்தவர்களுக்கும் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்.

✦ வெகுவிரைவாக தீர்மானங்களை எட்டக்கூடாது. தீர்வுக்கு முன்னர் போதிய கலந்துரையாடல்கள் இடம்பெறவேண்டும்.

✦ முடிவுகளை மௌனமாக ஏற்றுக்கொள்ளும் பண்பு தவிர்க்கப்பட வேண்டும்.

**தரச்சுற்றுக் கூட்டங்களை பின்வரும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்தலாம்.**

1. ஒரு குறித்த கடமை உரிய நேரத்தில் அல்லது உரிய ஒழுங்கில் செய்யப்படவில்லை எனக் கண்டால் -

*உதாரணமாக:-* i. வாகனங்களில் ஏற்றப்படும் பொருட்கள் உரிய நேரத்தில் சென்றடைவது இல்லை.

ii. கணக்காய்வுக்கான புத்தகங்கள், பதிவேடுகள், பட்டியல்கள் தயாரிக்கப்படாதுள்ளன.

*தீர்வு :-* இந்த நிலையில் சம்பந்தப்பட்ட விடயங்களுடன் தொடர்புள்ளவர்கள் தரச்சுற்றுக் கூட்டங்களைக் கூட்டி முடிவெடுப்பதற்கு முகாமைத் தரத்திலுள்ளோர் ஒழுங்குகளை மேற்கொள்ளல்.

2. நிறுவனத்தின் படிவங்கள், கோவைகள் ஒழுங்குமுறையாக வைக்கப்பட்டு இருக்கவில்லை. பல வருடங்களாக ஒரே இறாக்கைகளில் இவை அடுக்கப்பட்டுள்ளன. தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவைகள் சிரமமாய் இருக்கின்றன.

*தீர்வு:-* உரிய அங்கத்தவர்கள் ஒன்றுகூடி, தேவையற்ற ஆவணங்களை எவ்வாறு நீக்குவது, எப்போது செய்வது இவ்வாறு செய்யும் போது ஏற்படும் பிரச்சினைகள் எவை.

பழைய ஆவணங்களை எங்கே வைப்பது, தேவையற்ற ஆவணங்களைத் தொடர்ந்து வைத்திருக்க வேண்டுமா? என்ற கேள்விகள் கேட்டு, தீர்மானித்து முடிவு செய்தல், இந்த நிலைமை ஏன் ஏற்பட்டதென்பதை விவாதித்தலைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும். ✪

# நிறுவனமொன்றின் வளர்ச்சியில் ஊழியர் ஒருவரின் பங்களிப்பு



தொழில் நிறுவனமொன்றில் ஊழியர் ஒருவர் சக ஊழியர்களுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை அறிந்திருத்தல் அவசியமானதொன்றாகும்.

ஒரு ஊழியர் தனது கடமையில் இருக்கின்றபோது, அவரது கடமைக்கு இடையூறாக இன்னொரு ஊழியர் செயற்படுவதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

தன்னுடைய கடமைக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில், ஏனைய ஊழியர்களுடன் ஊழியர் பழகுதல் நிறுவனத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குத் துணை புரியும். ஒரு நிறுவனம் கூட்டு உழைப்பின் விளைவாலேயே நன்மைகளைப் பெற்றுக்கொள்கின்றது என்பதை அந்த நிறுவனத்தில் பணிபுரியும் ஒவ்வொரு ஊழியரும் புரிந்துகொள்ளவேண்டும்.

ஒரு தனிமரம் எவ்வாறு தோப்பாக மாறுகின்றதோ, ஒரு தோப்பின் வளர்ச்சியில் தனிமரம் எவ்வாறு பங்களிப்பு நல்குகின்றதோ, அதேபோன்ற செயல்தான் நிறுவனத்தின் வளர்ச்சியில் தனிநபர் ஒருவரின் - அதாவது ஊழியர் ஒருவரின் பங்களிப்பு அமைகிறது.

ஊழியர் ஒருவர் தனக்கு ஏற்படும் தேவையற்ற குறுக்கீடுகளை முதலில் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். இதுதொடர்பான தகவல்களை, அறிவுறுத்தல்களை ஊழியர் ஒருவர் சக ஊழியர்களுக்கு வழங்குதல் சிறந்தமுறையாகும். ஒரு பணியாளர் தன்னைச் சூழவுள்ள பணியாளர்களைப் பணிபுரியக் கூடியவகையில் தன்னிடம் இருக்கும் தகவல்களை வழங்குவது தவறான நடவடிக்கையல்ல.

ஒரு ஊழியர் தனது பணியில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றபோது, ஏதேனும் முக்கிய விடயமாக இன்னொரு ஊழியர் கதைக்க வருகிறார் என்று வைத்துக்கொண்டால், அந்த ஊழியரோடு பணிசெய்யும் இடத்தில் கதைக்கக்கூடாது.

ஊழியர் கூறவந்த விடயத்தை பணிபுரியும் இடத்தில் வைத்துக் கேட்பதன் மூலமாக ஏனைய ஊழியர்களின் கவனமும் இந்த விடயத்தில் செல்லுகின்ற சந்தர்ப்பமே உருவாகின்றது.

இந்தச் சூழ்நிலையைத் தவிர்த்தல் உண்மையான ஊழியரின் முதற்பணியாக அமைகிறது. இந்த வேளைகளில் ஒரு ஊழியர் தான் பணிபுரியும் இடத்துக்கு வெளியே அவரை அழைத்துச்சென்று, அந்த விடயம் பற்றிக் கதைத்துக் கொள்ள வேண்டும்.

மேலும், ஊழியர்கள் தமது கடமை நேரத்தில் இன்னொருவரைச் சந்திப்பதைக் கூடிய வரையில் தவிர்த்தல் நல்லதொரு விடயமாகும். தனது கடமை நேரத்தில் உறவினரைச் சந்திப்பது, உறவினர் ஊழியரைச் சந்திக்க வருவது போன்றவற்றைத் தவிர்த்தலே நிறுவனத்தின் முன்னேற்றத்துக்கு வழியேற்படும்.

முக்கியமான, அவசரமான விடயங்களுக்காக உறவினர் - ஊழியரைச் சந்திக்க வருகின்றபோது, அவர்களை சந்திக்க விடாத நிர்வாகம் ஊழியர்களிடையே நன்மதிப்பை இழந்துவிடும் என்பதைத் தொழில் நிறுவனம் இந்த விடயத்தில் புரிந்து கொள்ளவேண்டும்.


தொழில் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்கள், உரிய நேரத்தில் சமூகமளித்தல், தமக்குரிய கடமைகளைச் செவ்வனவே செய்தல் என்பன மிக முக்கியமான விடயமாகும்.

ஊழியரின் கடமைகள் இவைதான் என்பதையும், இன்ன இன்ன பணிகளைத்தான் இவர்கள் மேற்கொள்ளவேண்டுமென்பதையும் அட்டவணைப்படுத்தலே நிறுவனத்தின் முதற்பணியாக இருத்தல் வேண்டும்.

குறித்த பணிகளை விரைவாகவும், திறமையாகவும் புரியும் ஊழியர்களை இனங்கண்டு, அவர்களுக்கு கொடுக்க வேண்டிய மதிப்பைக் கொடுப்பதும், நிறுவனத்தின் கடமையாகும். இதன் மூலம் ஊழியர்களிடையே ஒரு உற்சாகத்தை ஏற்படுத்த முடியும்.

பூ.நகுலன்.

# தொழில் வங்கி



| நிறுவனம் | வெற்றிடமாகவுள்ள பதவிகள் | அடிப்படைத் தகுதி | முடிவு திகதி |
|---|---|---|---|
| கெயர் Care | 01. திட்ட இணைப்பாளர் நிறுவன அபிவிருத்தியும், பலப்படுத்தலும். (மன்னார்) | சமூக விஞ்ஞானப் பட்டப் படிப்புடன் மூன்று வருடத்துக்குக் குறையாத நிறுவன அபிவிருத்தி சார்ந்த அனுபவம்- ஆங்கிலப் புலமை. | 10.08.2004 |
| | 02. திட்டஇணைப்பாளர் வியாபார அபிவிருத்தி. (மன்னார்) | விவசாயம் / பொருளாதாரம்/ முகாமைத்துவ நிர்வாகம் ஏதாவதொன்றில் பட்டதாரி அல்லது டிப்ளோமா சான்றிதழ் | |
| | 03. திட்ட இணைப்பாளர் நீர்வள முகாமைத்துவம். (மன்னார்) | வவசாயம் / இயற்கை வளமுகாமைத்துவம் ஏதாவதொன்றில் பட்டதாரி. மூன்று வருட நீர்வள முகாமைத்துவம் சார்நத அனுபவம். | |
| | 04. திட்ட உதவியாளர். (மன்னார்) | விவசாயம் / சமூக விஞ்ஞான டிப்ளோமா சான்றிதழ் மூன்று வருட அனுபவம். | |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறவிரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# விற்றமின் A கொண்ட மரக்கறி கரட்

கரட்டின் பிறப்பிடம் ஆப்கானிஸ்தானும், அதனை அண்டியுள்ள பகுதிகளுமாகும். அந்நிய படையெடுப்பால் எமக்கு வந்துசேர்ந்த மரக்கறிவகைகளுள் கரட்டும் ஒன்று. ஆனால், இப்போது எமது பிரதேச காய்கறிகளைவிட மலிவாக இது கிடைப்பதால், இதனை உற்பத்தி செய்தும், பயன்படுத்தியும் பலன் பெறமுடியும். 'டையுகஸ் கரோட்டா' என்ற தாவரவியல் பெயர் கொண்டு அழைக்கப்படும் கரட்டில் காரடீன் என்ற சிறப்புப் பொருள் உள்ளது. இதுவே விட்டமின் 'ஏ' உண்டாவதற்குக் காரணமாக இருக்கிறது.

**காலநிலை**

கடல்மட்டத்திலிருந்து 1200 மீற்றர் - 1800 மீற்றர் உயரமான, வெப்பநிலை 15-20 செண்டிகிரேட் இருக்கும் பிரதேசம் கரட் உற்பத்திக்கு உகந்ததாகும். கரட் -நுவரெலியா, பதுளை, கண்டி ஆகிய மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது. காபனிக் அடங்கிய மண், அல்லது மணல் கலந்த மண்ணிலும் கரட் நன்றாக வளரும். யாழ்ப்பாணம், வவுனியா போன்ற பிரதேசங்களில் பெரும்போகத்தின்போது, சிறியளவில் கரட் உற்பத்தி நடைபெறுகின்றது.

**வகைகள்**

கரட்டில் - டொப்வெயிட், கோஜமார்கட், கிம்கரோடா, பலாதி என நான்கு வகைகள் உண்டு. இதில் அதிகமாக கிம்கரோடா என்ற வகையே உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த வகைக் கிழங்கு உருளை வடிவமாகவும், ஒரேஞ் நிறமாகவும் காணப்படும்.

ஏனைய உற்பத்திக்கு மண்ணைத் தயார்படுத்துவது போலவே, கரட் உற்பத்திக்கும், 20-30 சென்ரிமீற்றர் ஆழத்துக்கு மண்ணைப் புரட்டி, மண் கட்டிகளை உடைத்து பாத்திகளைச் சிறிதாகத் தயார்படுத்திக்கொள்ளவேண்டும். 1 மீற்றர் அகலமான, விரும்பிய நீளத்துக்கு பாத்திகளை ஒழுங்குசெய்து கொள்ளலாம். கரட் உற்பத்தியின்போது, பதியங்களைப் பாவிப்பதில்லை. கரட் விதைகளை நேரடியாகவே பாத்திகளில் விதைக்கவேண்டும். இதன்காரணமாகவே பாத்திகளை நன்றாக ஒழுங்குசெய்தல் வேண்டும். கரட் விதைகளைப் பாத்திகளில் இரண்டு முறைகளில் விதைக்கலாம்.

1. வரிசை முறை
2. தூவும் முறை

**வரிசை முறை**

மேலே குறிப்பிட்டவாறு ஒரு மீற்றர் அகலமான, விரும்பிய நீளத்தைக் கொண்ட பாத்திகளை ஒழுங்கு செய்து, பாத்தியின் குறுக்குப் பக்கமாக 20 சென்ரிமீற்றர் அகலத்தில் 1 1/2 சென்ரிமீற்றர் ஆழமான சிறிய வரிசைகளை ஒழுங்கு செய்யுவேண்டும். ஒழுங்கு செய்துகொண்ட வரிசைகளில் விதைகளை முளைக்கப் போடவேண்டும். ஒரு வரிசையில் 30-35 விதைகள் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவேண்டும். விதைகளைப் பாத்திகளில் போட்ட பின்னர், சிறிதளவு மண்ணால் விதைகளை மூடிவிடவேண்டும். அதன்பின்னர், வைக்கோலால் பாத்திகளை மேலால் மூடிவிடவேண்டும்.

நீர்விநியோகிப்பதன்மூலம், கரட்டின் ஆரம்ப வளர்ச்சிக்கு உதவமுடியும். விதைகள் முளைக்க 8-10 நாட்கள் வரை செல்லும். அதன்பின்னர்மூடி இருக்கும் வைக்கோலை அகற்றிவிட வேண்டும். கரட் முளைக்கும் பொழுது, மிகக் கவனமாக அவற்றை அவதானிக்க வேண்டும். காரணம் என்னவெனில், தண்டுகளின் அடி அல்லது வேர்கள் கறுப்பு நிறமாக மாறி, கன்று அழுகிவிடும் நோய் ஏற்பட இடமுண்டு. இந்த நோய் ஏற்பட்டால், அதற்குத் தகுந்த கிருமிநாசினியை உபயோகிக்க வேண்டும். விதைகள் முளைத்து 3-4 வாரங்கள் சென்றதன் பின்னர், மேலதிகமான கன்றுகளை நீக்கிவிடவேண்டும். இரு கன்றுகளுக்கிடையில் 5 சென்ரிமீற்றர் இடைவெளி இருக்குமாறு பார்த்துக்கொள்ளவேண்டும். முக்கியமாக ஒரே இடத்தில் இருகன்றுகள் இருந்தால், அதில் ஒன்றைப் பிடுங்கிவிடவேண்டும்.

**தூவும் முறை**

தூவும் முறையில் பாத்திகளை ஒழுங்கு செய்து, பாத்திகளின் மேல் கரட் விதைகளைத் தூவிவிட வேண்டும். தூவும் விதத்துக்கு ஏற்றவாறு கன்றுகள் முளைக்கும். இந்த முறையில் கன்றுகளின் இடைவெளி ஒவ்வொருவிதமாக இருக்கும். சில சமயங்களில் ஒரே இடத்தில் பல கன்றுகள் முளைக்கும். இவற்றைப் பிடுங்கி இடைவெளி உள்ள இடங்களில் நடலாம்.

இந்த முறைக்கு அதிகளவு விதைகள் தேவைப்படும். தூவும் விதைகள் வெவ்வேறு ஆழத்தில் முளைக்கும். இதனால், வெவ்வேறு அளவுகளைக்கொண்ட கரட்டுகள் முளைக்கும். இந்த முறையில் களைகளைப் பிடுங்குவது, உரம் பாவித்தல் ஆகியன சிரமமாகும்.



பாத்திகளைத் தயாரித்த பின்பு ஒரு ஹெக்ரேயருக்கு 8-10 தொன் காபனிக் உரம் பாவிப்பது மிக முக்கியமாகும். இதற்காக மாட்டுச் சாணம் அல்லது கொம்போஸ் உரம் உபயோகிக்கலாம். இதைவிட உரமாக ஒரு ஹெக்ரேயருக்கு 275 சுபர் பொஸ்பேட்டும், வெளி உரமாக 110 கிலோகிராம் யூரியாவும், 85 மியுரியெட் ஒசப்பொட்டாசும் மூன்று வாரத்துக்கு ஒரு தடவை வீதம், மூன்று முறை உரம் பாவிக்கவேண்டும். சிறப்பான விளைச்சலைப் பெறு வதற்காக உரம் பாவிக்கவேண்டும். நிலத்திலுள்ள களை களைப் பிடுங்கிவிடவேண்டும். அதிகம் களைகள் முளைப்ப தால், நோய்கள் பரவுதல், செடியின் வளர்ச்சி குன்றுதல் ஏற்படலாம்.

நீர் விநியோகம் சீராக இருக்கவேண்டும். போதியளவு நீர் விநியோகிக்காவிட்டால், விளைச்சல் குறைவடைய வாய்ப்பு உண்டு.

**பிரதான நோய்களாக -**

1. இலைகள் வாடுதல்
2. மா பூஞ்சணம் பிடித்தல் ஏற்படலாம்.

இவற்றைக் கிருமிநாசினி ஒன்றைப் பயன்படுத்துவதன் மூலம் தடுத்துக் கொள்ளலாம். சில சந்தர்ப்பங்களில் கரட் கிழங்குகளுக்கு 'அர்ஷனியா' என்ற பக்றீரியாப் பாதிப்பு ஏற்பட லாம். நிலத்தில் நீர் அதிகமாகத் தேங்கி நிற்றல், மேலதிக நீர் பாய்ச்சல், தொடர் மழை போன்ற காரணங்களால் இந்த நோய் அதிகரிக்கலாம். ஆகையால், நிலத்தைப் பாதுகாப்ப தினூடாக இந்த நோயைத் தடுத்துக்கொள்ளலாம்.

கரட் இலைகளைப் பாதிக்கும் நோய்களுக்குத் தகுந்த கிருமிநாசினி ஒன்றைப் பயன்படுத்துவதன்மூலம் தடுத்துக் கொள்ளலாம்.

நிலத்தில் விதைத்து 3-31/2 மாதங்கள் சென்றபின்னர் கரட் கிழங்குகளைப் பெற்றுக் கொள்ளலாம். கரட் வகைகளுக்கு ஏற்றவாறு விளைச்சல் வித்தியாசமாகக் காணப்படும். கரட் கிழங்கின் மேல்பகுதி 5 சென்ரிமீற்றர் வளர்ச்சி அடைந்த பின்பு, அந்தக் கிழங்குகளைப் பிடுங்கிவிட்டு, மீதிக் கிழங்குகளைப் பிடுங்காமல் விடவேண்டும், வளர்ச்சியடைந்த பின்பு பிடுங்கலாம்.

கரட்டைப் பிடுங்கி பலகாலத்துக்கு சேமித்துவைக்க முடியாது. பிடுங்கியவுடனேயே நீரால் கழுவி சந்தைக்கு அனுப்பவேண்டும்.

மேலும், நன்றாக உரம் போட்டு பராமரித்த ஒரு ஹெக்ரேயர் நிலத்தில் 35-40 தொன் கரட் பெற்றுக்கொள்ளலாம். கரட் உற்பத்தியை மேற்கொள்வதால், நல்ல விளைச்சலையும், ஆதாயத்தையும் பெற்றுக்கொள்ளலாம். ✻

- சசி சந்திரகாசன்

# காலமாறுதலுக்கேற்ப சிறுதொழில் மாற்றங்களை உள்வாங்க வேண்டும்

ஒரு நாட்டின் பொருளாதார வலுவை அளக்கும் கருவியாக அந்த நாட்டின், சிறு தொழில் வளர்ச்சி கருதப்படுகிறது. எமது நாட்டின் மொத்தத் தொழில் உற்பத்தியில் சிறுதொழிலின் பங்கு குறிப்பிடத்தக்கது. அத்துடன், ஏற்றுமதி உற்பத்திப் பொருட்களிலும் இவற்றின் பங்கு அதிகம்.

ஜப்பானின் பொருளாதார வெற்றிக்கு ஆணிவேராய் அமைந்தவை - அந்த நாட்டிலுள்ள சிறுதொழில்களே. பொருட்களின் வடிவமைப்பு, நிர்வாகமுறைகள், இயந்திரங்களைப் பழுது பார்த்தல் ஆகியவற்றில் புதிய புதிய யுக்திகளைக் கையாண்டு சாதனை படைப்பவையும் சிறுதொழில்களே.

குறைந்த நடவடிக்கைகளால், உற்பத்திச் செலவு அதிகரிப்பு, தொழில்நுணுக்கம் தெரிந்த வல்லுநர்களையும், ஊழியர்களையும் தொடர்ந்து நிரந்தரமாகத் தக்கவைத்துக் கொள்ள முடியாத பொருளாதார சூழல் - தொழில், வியாபாரத்தில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் மேலும் சிறுதொழில்களில் அரிதாகவுள்ள பணம், நேரம் இவை இரண்டும் -

✎ தொழில் தொடங்குவதற்காக உரிமம் இதர சான்றிதழ்கள் பெறுவதற்காகவும்,

✎ சரக்குகளை விற்பதற்காகவும், வீணாக விரயமாகின்ற பரிதாபநிலை போன்றவை சிறுதொழில்களில் அதிகம் உள்ளன.



பெரிய நிறுவனங்களுக்குச் சந்தை திறந்து விடப்பட்டுள்ளதால், சிறுதொழில்கள் அவற்றுடன் போட்டிபோட வேண்டிய சூழல்.

முதலாவதாக - மின்சாரம், கடன் இரண்டும் சிறுதொழில்களுக்குக் கிடைப்பதில் தாமதம். சிறுதொழில்களிடமிருந்து பொருட்களைப் பெற்று, உரியகாலத்தில் பொருட்களுக்கான தொகையை அனுப்பாத பொதுத்துறை நிறுவனங்களின் போக்கு, இவற்றைத் தொடர்ந்து நுகர்வோரிடையே பெரும் விழிபபுணர்வு ஏற்படத் தொடங்கியுள்ள தன் விளைவு, நுகர்வோர் மத்தியில் பொருளின் தரம், பொருளின் பெயர் சிறப்படையத் தொடங்கியுள்ளது.

மாறிவரும் பொருளாதாரத்தில் சிறுதொழில் முயற்சியாளரிடையே வளர்ச்சி ஏற்பட்டால்தான் அவர்கள் தமது தொழில் வாழ்க்கையைக் காப்பாற்றிக்கொண்டு வளரமுடியும்.

பொருளாதாரமும், தொழில்களும் ஓர் தேக்க நிலையிலிருக்கும் இன்றைய சூழலில் - சிறு தொழில்கள் கவனமுடன் செயல்படுவது அவசியமாகிறது. தரமுள்ள பொருட்களுக்கு உள்நாட்டுச் சந்தையில் என்றுமே நிலையான வாய்ப்புண்டு.

இரண்டாவதாக - பொறியியல்துறையில் - இந்தியாவிலுள்ள திறமையான ஆட்பலம் போன்று, உலகில் வேறு எங்குமே இல்லை. இது ஏராளமான தொழில் வாய்ப்புக்களையும், புதிய புதிய கண்டுபிடிப்புக்களையும் அளித்து தொழில்களை வளரச் செய்கிறது.

மூன்றாவதாக - தொழில்களுக்கு, குறைந்த சம்பளத்துக்குக் கிடைக்கும் தொழிலாளர்கள்.

நான்காவதாக - சிறுதொழில் மற்றும் விவசாயத்துக்குள்ள ஏற்றுமதி வாய்ப்புக்கள்.

எனவே, புதிய தொழில் முனைவோர்கள், ஏற்கனவேயுள்ள தொழில்களை விரிவுபடுத்த நினைப்பவர்கள் மேற்குறிப்பிட்டவைகள் தங்களைப் பாதிக்காதவாறு, கால மாறுதலுக்கேற்ப காப்பாற்றிக்கொள்ளத் தங்களை மாற்றிக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

சிறு தொழில்கள் - அளவிலும், பலத்திலும் வளர்ச்சி பெறுவதற்கு மேற்குறிப்பிட்டவை மிக முக்கியமானவையாகும். ❖

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | நெல்லியடி | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 20/= | 25/= | 30/= | 20/= | 20/= | 20/= | 15/= |
| வெண்டிக்காய் | 10/= | 25/= | 30/= | 15/= | 15/= | 40/= | 20/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 65/= | 70/= | 80/= | 70/= | 70/= | 70/ |
| கத்தரிக்காய் | 30/= | 30/= | 40/= | 40/= | 40/= | 30/= | 25/= |
| பாகற்காய் | 30/= | 30/= | 40/= | 35/= | 30/= | 40/= | 50/= |
| கரட் | 50/= | 70/= | 70/= | 60/= | 60/= | 70/= | 70/= |
| பீற்றூட் | 30/= | 30/= | 40/= | 25/= | - | 40/= | 30/= |
| முருங்கைக்காய் | 25/= | 50/= | 40/= | 20/= | 20/= | 20/= | 20/= |
| வெங்காயம் | 35/= | 40/= | 40/= | 30/= | 35/= | 40/= | 35/= |
| பச்சை மிளகாய் | 70/= | 60/= | 70/= | 60/= | 60/= | 100/= | 80/= |



# போதிய மருந்துகள் இல்லாமையால் வன்னியில் கால்வாய்நோய் தீவிரம்!

வன்னியில் கால்நடைகளுக்கு கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு கால்வாய் நோய் பரவியுள்ளது. உரிய காலத்தில் கால்வாய் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான மருந்துகள் இலங்கை கால்நடை உற்பத்திக் கூட்டுறவுத் திணைக்களத்தால் அனுப்பப்படாமையே இதற்குக் காரணமென, வன்னியிலுள்ள கால்நடை மருத்துவர்கள் தெரிவித்தனர்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் மல்லாவியில் கால்வாய் நோய் இனங்காணப்பட்டவுடன், கால்நடை மருத்துவர்களின் அறிவிப்பின் பேரில் ஆயிரம் மாடுகளுக்கான மருந்துகள் அனுப்பப்பட்டன.

அதற்கு அடுத்த கட்டமாக ஏனைய இடங்களுக்கும் கால்வாய் நோய் பரவுவதைத் தடுக்கும் நோக்கில் மேலதிக மருந்துகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஆனால், கால்நடை அபிவிருத்தி விவசாயத் திணைக்களம் உடனடியாக மருந்துகளை வழங்கவில்லை. 200 மாடுகளுக்கான மருந்துகளையே அப்போது வழங்கியது.

ஆனால், அப்போது கால்நடை அபிவிருத்தித் திணைக்கள களஞ்சியசாலையில் போதியளவு மருந்துகள் இருந்ததாக மருத்துவர் கள் தெரிவித்தனர்.

தென்னிலங்கை மாடுகளுக்கு கால்வாய் நோய் பரவினால் அதனைத் தடுக்க வேண்டுமென்னும் நோக்கில், வன்னிப்பகுதிக்குத் தேவையான மருந்துகளை அனுப்பாது தடுத்துவைத்திருந்தமையால், வன்னியில் மாடுகளுக்குத் தேவையான மருந்துகளை வழங்காமையாலேயே இங்கு கால்வாய் நோய் பெருமளவில் பரவியது.

இந்த நிலையில் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக வன்னியில் மாட்டிறைச்சிக் கடைகள் யாவும் பூட்டப்பட்டன. அத்துடன், வன்னியிலிருந்து பால் சேகரித்து நெஸ்பிறே நிறுவனத்திற்கு கொண்டு செல்லும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது அதுவும் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் வன்னியில் கால்நடையாளர்கள் மிகுந்த நெருக்கடிக்குள்ளாகி, வருமானத்தை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி)

## ஆங்கில பாட சித்தியில் கிளிநொச்சி 30 ஆவது இடத்தில்

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சித்தியடையும் வீதத்தில் கிளிநொச்சி மாவட்டம் 30 ஆவது இடத்திலும் முல்லைத்தீவு மாவட்டம் 29 ஆம் இடத்திலும், மன்னார் மாவட்டம் 28 ஆம் இடத்திலும் உள்ளதாக, கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் கவுன்ஸில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனம் இலங்கையில் 30 கல்வி மாவட்டங்களிடையே நடத்திய ஆய்விலேயே இந்த முடிவுகள் பெறப்பட்டன. இதேவேளை யாழ். குடாநாடு 18 ஆவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியா வடக்கில் 3866 குடும்பங்கள் மீள் குடியமர்வு

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் இதுவரை 3866 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.

1997 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்த மக்கள், தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள போர் நிறுத்த உடன்பாட்டை அடுத்து அங்கு மீளக் குடியமர்ந்து வருகின்றனர். இதுவரை சுமார் 3866 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளன.

இவர்களுக்கான உதவிகளை வவுனியா மாவட்ட அரச அதிபர் மற்றும் வவுனியா வடக்கு உதவி அரச அதிபர் ஆகியோர் வழங்கி வருகின்றனர். (தி)






கிளிநொச்சி கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஏழரை இலட்சம் ரூபாவில் யுனிசெவ் நிறுவன நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட புதிய வகுப்பறைத் திறப்பு விழாவில் - கற்சிலைமடு இராமநாதபுரம் வலயப் பொறுப்பாளர் சோழநிலவன் தேசியக் கொடியேற்றுவதைக் காணலாம். (17)

## மன்னார் மக்களின் நன்மை கருதி உலக தரிசன நிறுவனத்தால் பற்சிகிச்சை வாகனம் அன்பளிப்பு

உலக தரிசன நிறுவனத்தின் ஏற்பாட்டில் - மன்னார் அடம்பன், ஆண்டான் குளம், வட்டக் கண்டல் இலுப்பைக்கடவை ஆகிய பகுதி மக்களின் நன்மைகருதி நடமாடும் பற்சிகிச்சை வாகனம் கையளிக்கப்பட்டுள்ளது.

• இந்த வாகனம் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த வாகனம் நவீன மருத்துவ வசதிகளை உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை 'நீரப்' நிறுவனத்தினால் பண்டிவிரிச்சான், அடம்பன் மருத்துவமனைகளுக்கு அம்புலன்ஸ் வண்டிகளும் கையளிக்கப்பட்டுள்ளன. (தி)

## முப்பது லட்சம் ரூபா செலவில் நெடுங்கேணியில் பிரதேசசபை

வவுனியா வடக்குக்கான பிரதேசசபை நெடுங்கேணியில் புதிதாக அமைக்கப்பட்டு வருகிறது. 1997 ஆம் ஆண்டு இராணுவத்தினர் மேற்கொண்ட ஜயசிக்குறு நடவடிக்கையின்போது நெடுங்கேணியில் அமைக்கப்பட்டிருந்த வவுனியா வடக்குப் பிரதேசசபை முற்றாக அழிக்கப்பட்டது.

இந்தநிலையில் அங்கு தற்போது மீளக்குடியமர்ந்துவரும் மக்களின் தேவைகள் காரணமாக அவற்றைப் பூர்த்திசெய்யும் வகையிலேயே இந்தப் பிரதேசசபைக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகிறது.

வவுனியா வடக்குப் பிரதேச சபை உப அலுவலகம் நயினாமடுவில் அமைக்கப்பட்டு வருகிறது. இதற்கு 25 இலட்சம் ரூபாவும், நெடுங்கேணியில் அமைக்கப்படவுள்ள பிரதேசசபைக் கட்டடத்துக்கு 30 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (தி)

## சின்னஞ்சிறு செய்திகள்

### 'இடி' தெருவெளி நாடகம்

(கிளிநொச்சி)

சமாதானத்தின் உண்மைத் தன்மையைப் புலப்படுத்தும் நோக்கில் - செ.ரகுவின் நெறியாள்கையில் விடியலோசைக் கலைஞர்கள் வழங்கும் "இடி" தெருவெளி நாடக நிகழ்வு - கிளிநொச்சிப் பிரதேசத்தின் பல பாகங்களிலும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. (ந)

### குளவிக் கொட்டுக்கு இலக்கான மூவர் வைத்தியசாலையில்

வட்டக்கச்சி நாவலடிப் பகுதியில் குளவிக்கூடு ஒன்றுக்கு விளையாட்டாகக் கல்லெறிந்த போது, அவை கலைந்துசென்று வீதியால் சென்றவர்களைத் தாக்கியது.

இதன்போது குளவிக்கொட்டுக்கு இலக்கான இராமநாதபுரத்தைச் சேர்ந்த ம.லதீஸ் (வயது 13) ம.சபினஸ் (வயது 25) க.ஜெனதன் (வயது 10) ஆகிய மூவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சிறு காயங்களுக்குள்ளான பலர் வட்டக்கச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வெளியேறினர்.

### கிளிநொச்சியில் புதிய விளையாட்டுக்கழகம்

(கிளிநொச்சி)

தமிழீழ விளையாட்டுத் துறையினரால் கிளிநொச்சியில் 5 இலட்சம் ரூபா செலவில் புதிதாக விளையாட்டு மைதானமொன்று அமைக்கப்பட்டுவருகிறது.

இதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்துக்கான விளையாட்டு மைதானம் முல்லைத்தீவு நகரிலும், வவுனியா மாவட்டத்துக்குப் புளியங்குளத்திலும் - சுமார் 5 லட்சம் ரூபா செலவில் 2 மைதானங்கள் அமைக்கப்பட்டுவருகிறது.

### திருநகர் கிராமத்தில் எழுச்சிப் பேரவை தெரிவு

(மல்லாவி)

மல்லாவி திருநகர் கிராம அலுவலர் பிரிவுக்கான சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுத் தெரிவும், ஊரக தேசிய எழுச்சிப் பேரவைத் தெரிவும் - நேற்றுமுன்தினம் திருநகர் முன்பள்ளி மண்டபத்தில் க.ராம அலுவலர் ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது.

கருத்துரைகளை துணுக்காய் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் புனிதன், கிராமப் பொறுப்பாளர் பாவலன், கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் அமிர்தலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர்.

### பாலங்கள் புனரமைப்பு

ஏ 9 வீதியில் ஆனையிறவுப் பகுதியில் உள்ள மூன்று பிரதான பாலங்களை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஏ 9 வீதி புனரமைப்புப் பணிகள் முழுமையாகப் பூர்த்தியடையாதுள்ள நிலையிலேயே - யுத்த காலத்தில் முற்றாகச் சேதமடைந்து - தற்காலிகமாகச் செப்பனிடப்பட்டிருந்த மூன்று பாலங்களைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மிக விரைவில் இந்தப் பாலங்களைப் புனரமைக்கும் பணிகளை முடிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### மையங்கேணிக்குளம் புத்துவெட்டுவான் ஊடாக பஸ்சேவை

முல்லைத்தீவு மாவட்ட மையங்கேணிக் குளம், புத்துவெட்டுவான், ஐயங்குளம், ஏறாங்கண்டல் ஆகிய கிராமங்களூடாக பயணிகள் போக்குவரத்துக்கான பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் இந்தப் பகுதிகளில் பஸ் சேவை இடம்பெறவில்லை.

இதனால், பெரும் நெருக்கடிகளைச் சந்தித்த அந்தப் பகுதி மக்கள், நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்ட இந்த பஸ் சேவையினால் பெரிதும் நன்மையடைந்துள்ளனர். (தி)

## புதுக்குடியிருப்பில் 25 மில்லியன் செலவில் பொதுநூலகம் அமைக்கப்படவுள்ளது

முல்லைத்தீவில் 25 மில்லியன் ரூபா செலவில் நூலகம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக, புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் தயானந்தா தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்படி பரந்தன் முல்லைத்தீவு வீதியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு அருகாமையிலுள்ள 25 ஏக்கர் காணியில் - பொது நூலகம், விளையாட்டு மைதானம், பிரதேச சபைச் செயலகம் என்பன அமைக்கப்படவுள்ளன.

இந்த வகையில் 8 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் தற்காலிக நூலகமும், 20 லட்சம் ரூபா செலவில் பிரதேச சபைக் கட்டடமும், 10 லட்சம் ரூபா செலவில் நீர்த்தாங்கி ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

அத்துடன் உதைபந்தாட்டம், துடுப்பாட்டம் ஆகியவற்றுக்கான மைதானம் ஒன்று அமைக்கப்பட்டு வருவதாகவும், இவை நிறைவடைந்ததும் 25 மில்லியன் ரூபா செலவில் நிரந்தர நூலகம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ர)



புலிகளின் குரல் வானொலி மன்றத்தினரால் - வடமராட்சி கிழக்கில் நடத்தப்பட்ட மாதாந்த முத்தமிழ் கலையரங்கம் நிகழ்வுகளிலிருந்து சில காட்சிகள். படங்கள் : ரமணன்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*நிலத்து இயல்பான் நீர்திரிந்துஅற்றாகும் மாந்தர்க்கு*
*இனத்துஇயல்பது ஆகும் அறிவு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## பேரினவாத தலைமைகளின் குத்துக்கரணம்.

நேற்று முன்தினம் ஒரே நாளில் இருவேறு செய்திகள் அரசு தரப்பில் இருந்தும், எதிர்க்கட்சித்தரப்பில் இருந்தும் ஏக காலத்தில் வெளியாகியுள்ளன.

இந்த இரு செய்திகளும், பேரினவாதத் தலைமைகளின் சந்தர்ப்பவாத அரசியல் முகங்களைத் தெட்டத்தெளிவாக்கியுள்ளன. அதுமட்டுமல்ல இலங்கையில் அமைதியை நிரந்தரமாக்க அவசியமானதும், அவசரமானதுமான இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றினை நியாயபூர்வமான பேச்சுவார்த்தைகளின் மூலம் எட்டுவதற்கு எந்தக்காலத்திலும் இவர்கள் ஒருமைப்பாட்டுணர்வுடன் செயற்படப்போவதில்லை என்ற செய்தியையும் உறுதிப்படுத்தியுள்ளது.

சில நாட்களின் முன்னர், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக, வெளியான அரச தரப்புச் செய்தியொன்று, இடைக்கால நிர்வாக அதிகார சபைக்கான கோரிக்கையின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதி தயாராகவுள்ளார் என்ற அறிவிப்பை வெளியிட்டிருந்தது.

இதனையடுத்து அரசின் பிரதான கூட்டுக்கட்சியான ஜே.வி.பி அதனை வன்மையாக எதிர்த்து அறிக்கை விட்டதுடன், அப்படியானதொரு முயற்சியை ஜனாதிபதி தன்னிச்சையாக மேற்கொள்வாரேயானால், அடுத்த நிமிடமே அரசுக்கான தமது ஆதரவை விலக்கிக்கொண்டுவிடும் எனக் கடுமையாக மிரட்டும் தொனியில் எச்சரிக்கை ஒன்றை விடுத்ததுடன், இடைக்கால நிர்வாக அதிகார சபையின் அடிப்படையில் பேச்சுக்களைத் தொடர்வதைக் கண்டித்து அதற்கெதிரான பிரசார நடவடிக்கைகளை கிராமிய மட்டத்திலிருந்து நாடுபூராகவும், மேற்கொள்ளப் போவதாகவும் முன்னறிவிப்புச் செய்துமிருந்தது.

இதனைத்தொடர்ந்து எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அந்தக்கட்சியின் பிரதான பேச்சாளர்களில் ஒருவரான ராஜிதசேனாரத்ன என்பவர் விடுத்த அறிவிப்பொன்றில், ஜனாதிபதி இடைக்கால நிர்வாக அதிகார சபையின் அடிப்படையில் பேச்சுவார்த்தையை நடத்த முன்வருவாரேயானால், அதற்குத் தமது கட்சி முழு அளவிலான ஆதரவை நிபந்தனையின்றித் தரத்தயார் என்று கூறியிருந்தார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியொன்றில், சிக்கலான ஒரு முக்கிய கட்டத்தைத் தாண்ட ஆளும்கட்சிக்கு, எதிர்க்கட்சியானது முழு அளவில் நிபந்தனையின்றி ஒத்துழைப்புத் தரத்தயார் என பகிரங்கமாக அறிவித்தது இதுவே முதற்தடவையாகும்.

அந்தச் சமயத்தில் ஜனாதிபதி வெளிநாட்டு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். எதிர்க்கட்சியின் இந்த அறிவிப்பானது அரசுக்குள் நெருக்கடியை உண்டுபண்ணும் ஒன்றாக இருந்தாலும் அதனை நிராகரிப்பதானது, சர்வதேச மட்டத்தில் தமக்கு அழுத்தங்களை அதிகளவில் ஏற்படுத்தும் என்ற அச்சமும் அவருக்கு இருக்கவே செய்தது.

இதேவேளை, ஜே.வி.பியை தோழமைக்கட்சியாக இணைத்துக் கொண்டதால், அந்தக்கட்சியே அதிகளவு அனுகூலங்களைப் பெற்றதாகி, இப்போது தன்னையே மிரட்டும் அளவுக்கு பெரும் சக்தி மிக்கதாக மாறிவருவதால் அதனைக் கட்டுப்படுத்த மார்க்கம் தேடும் நிலையிலும், ஜனாதிபதி இருந்தார் என்பதும் உண்மை.

ஐக்கிய தேசியக்கட்சியின் இந்த அறிவிப்பு ஜே.வி.பிக்கும் குழப்பத்தை ஏற்படுத்தியதுடன் மனோ - மலிக் குழுவின் மறு உயிர்ப்பு பற்றிய செய்தியும் அதற்குத் தலைவலியை ஏற்படுத்தவே செய்தது.

ஆனால், உருவாகிவரும் புதிய சூழல் தமக்குப் பாதிப்பை உண்டு பண்ணும் என்பதை உணர்ந்து கொண்ட ஜே.வி.பி அமைச்சர் அனுராவுடனான தமது நெருக்கத்தைப் பயன்படுத்தி ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவோ, அனுசரணையோ பேச்சுவார்த்தை தொடர்பான விடயத்தில் தமக்குத் தேவையில்லை என்றும், ஐக்கிய தேசியக்கட்சி நேர்மையற்ற ஒன்று என்றும் கூறியதுடன், அதற்கு எதிராக பல்வேறு குற்றச் சாட்டுக்களையும் அடுக்கியிருந்தது. இதனையடுத்து தமக்கு ஏற்பட்ட அதிருப்தி காரணமாக அரசுக்கு வழங்கத் தயாராக இருந்த ஆதரவு நிலைப்பாட்டைத் தாம் வாபஸ் பெற்றுக்கொள்வதாக ரணில் விக்கிரமசிங்க தமது கட்சியின் நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் தெரிவித்தார்.

இது ரணில் கொள்கைப்பிடிப்பின் உறுதியின்மையையே வெளிப்படுத்துவதாகவுள்ளது. ஏற்கனவே ஜே.வி.பி எதிர்க்கிறது என்றபடியால் தான் அரசுக்கு ஆதரவளிக்க முன்வந்தாகத் தெரிவித்தார். இப்போது அதே காரணத்திற்காக எதிர்ப்புத் தெரிவிப்பது ஏன்? ஜே.வி.பி தொடர்ந்தும் இதனை எதிர்க்கும் என்பது தெரிந்த விடயம் தானே.!

இதேபோன்று, ஜனாதிபதியும் தன்பங்குக்குக் குத்துக்கரணம் ஒன்றை அடித்துள்ளார்.

'இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசத் தயாரென்று தான ஒரு போதுமே கூறவில்லையாம்' - இதனை அவர் தனது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக் கூட்டத்தில் வைத்துக் கூறியுள்ளார்.

இப்படிக் கூறியுள்ளதன்மூலம், ஜே.வி.பியின் மிரட்டலுக்குத் தான் பணிந்துள்ளதை வெளிப்படையாகக் காட்டியுள்ளார் என்றே கூறவேண்டும்.

நேரத்துக்கொரு கதையும், வாரத்துக்கொரு அறிக்கையும் விடும் அரசும் - ஜனாதிபதியும் - எதிர்க்கட்சியும் எந்தப் பிரச்சினையிலும், எந்தக் காலத்திலும் உறுதியான ஒருமித்த முடிவை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை முழுமையாக அற்றுப் போய்விட்டது என்றே கூறமுடியும்.

இதனை சர்வதேச சமூகம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.


அரசோ, எதிர்க்கட்சியோ, ஜனாதிபதியோ சமாதானம் தொடர்பான தமது இறுதி நிலைப்பாட்டை உடனடியாக - காலங்கடத்தல் எதுவுமின்றி - நேரடியாகவும், வெளிப்படையாகவும் கூறவேண்டிய இறுதிக்கட்டம் வந்துவிட்டது என்றே கூறவேண்டும்.

விடுதலைப்புலிகள் தமது நிலைப்பாட்டை உறுதிபட சர்வதேச சமூகத்தின் முன் வைத்துள்ள நிலையில் இலங்கையரசு இந்த விடயத்தில் முடிவெடுக்கத் தயக்கம் காட்டுமேயானால், அது சமாதானத்திற்கெதிரான நிலைப்பாட்டை எடுக்க நினைக்கின்றது என்றே அர்த்தமாகும்.

இந்த நிலையில், அரசின் குத்துக்கரண நடவடிக்கைகள் - நெருப்புடன் விளையாட அரசு விரும்புகிறது என்ற எண்ணத்தையே உறுதி செய்யவைக்கிறது.

நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சரின் எச்சரிக்கை நிதர்சனமாகும் சூழலையே அரசு உருவாக்கத் தொடங்குகிறது என்றே நினைக்க வேண்டியுள்ளது.

## நாடும் நடப்பும்




# நகரில் வீதிப் போக்குவரத்து குறித்து விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது

## மாநகர ஆணையாளர் குணராஜா தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதி நவீன மயப்படுத்தப்பட்டு அழகுபடுத் தப்படுவதோடு, வீதிப் போக்குவரத்து நடவடிக்கைகளும் சீர்செய்யப்படும் என யாழ். மாநகரசபையின் புதிய ஆணையாளர் கலாநிதி க.குணராஜா தெரிவித்தார்.

யாழ். மாநகரசபையின் புதிய ஆணையாளராகப் பதவியேற்ற அவர் - யாழ். நகரப்பகுதி நவீன முறையில் அழகுபடுத்தப்படுவதுடன், நவீன மின் ஒளியூட்டல் வசதிகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், நகரப்பகுதியின் சுகாதார தரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளேன். குறிப்பாக பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்துதல், கழிவு நீர்வாய்க்கால்களை சீர்செய்தல், கண்ட இடங்களில் குப்பை கூழங்களைக் கொட்டுவதைத் தவிர்த்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

நகரின் வீதிப் போக்குவரத்து நடவடிக்கைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவித்த ஆணையாளர் - வீதிப்போக்குவரத்துக்கு இடையூறாக அமைக்கப்பட்டுள்ள நடைபாதைக் கடைகள் அகற்றப்படவுள்ளதோடு, வீதிகளில் செல்வோருக்கு இடையூறு விளைவிக்கும் வண்ணம் விற்பனைப் பொருட்களை அடுக்கி வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

மேலும், யாழ். நகரப்பகுதியில் அமைந்த தமிழர்களது வரலாற்றுப் பாரம்பரிய சின்னங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாக ஆணையாளர் தெரிவித்தார்.

குறிப்பாக, யாழ்ப்பாண இராஜ்ஜியத்தின் கடைசி மன்னனான சங்கிலியனது ஆட்சிக்காலச் சின்னங்களான - சங்கிலியன் வளைவு, மந்திரி மனை, யமுனா ஏரி என்பன பற்றி விசேட கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

# ஏழு தெரிவுக்குழுக்கள் நாடாளுமன்றில் அமைப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றம் நேற்று முன்தினம் கூடியபோது பல்வேறு விவகாரங்கள் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அமைக்கப்பட்ட ஏழு தெரிவுக் குழுக்களில் இரண்டு குழுக்களுக்கு நாடாளுமன்றச் சபாநாயகரும், ஏனைய ஐந்தில் மூன்று குழுக்களுக்கு எதிர்க்கட்சிகளும் தலைமை தாங்குகின்றன.

அரசாங்கத்தின் தலைமையில் இரண்டு தெரிவுக் குழுக்களே அமைக்கப்பட்டுள்ளதுடன் , எதிர்க்கட்சிகள் தரப்பில் இரண்டு குழுக்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியும், ஒருகுழுவுக்கு ஜாதிக ஹெலஉறுமயவும் தலைமை தாங்குகிறது.

நாடாளுமன்றத்தின் சிறப்புரிமையைப் பாதுகாப்பது தொடர்பான தெரிவுக் குழுவின் தலைமைப் பொறுப்பே ஜாதிக ஹெல உறுமயவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற வரலாற்றில் புதிய கட்சியொன்றுக்கு இவ்வாறு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைமைப்பதவி வழங்கப்பட்டது இதுவே முதற்தடவை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# அமைச்சர் டக்ளஸுக்கு குண்டு துளைக்காத கார்

## ஜனாதிபதி வழங்கினார்

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், இந்து கலாசார அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு குண்டு துளைக்காத கார் ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வழங்கியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை இலக்கு வைத்து அண்மையில் தற்கொலைத் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்படவிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதையடுத்தே, அமைச்சரின் பாதுகாப்பை அதிகரிக்கும் வகையில் அவருக்கு இந்தக் கார் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரையில் ஜனாதிபதி தவிர்ந்த அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் ஏழுபேருக்கு மட்டுமே, இத்தகைய குண்டு துளைக்காத வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவர்களுள் ஒருவராக இனிமேல் டக்ளஸ் தேவானந்தாவும் விளங்குவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகரிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருப்பதாகவும், இதன் பிரகாரம் அமைச்சர் பயணம் செய்யும் வாகனத்துக்கு மேலதிக பாதுகாப்பு வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## உலக வங்கி உதவியுடன்

# வீடுகள் அமைத்துக் கொடுக்க முதற்கட்டக் கொடுப்பனவு

உலக வங்கியின் நிதி உதவியுடன் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் வீடமைக்கும் திட்டத்தின்கீழ் புனரமைக்கப்படவுள்ள வீடுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, யாழ். செயலக வீடமைப்பு உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வே.சாம்பசிவம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

வடக்கு - கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு உலகவங்கியின் நிதியுதவியுடன், புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்கும் திட்டம் - கடந்த ஜனவரி மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்பட ஏற்பாடாகியிருந்தது.

எனினும், தற்போது தான் அந்தத் திட்டத்துக்கான முதற்கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்படத் தொடங்கியிருக்கிறது.

இதன்படி, யாழ். மாவட்டத்தில் 125 குடும்பங்களுக்கு முதற்கட்டமாக தலா 15 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பணத்தை இன்று முதல் பயனாளிகள் தமது வங்கிக் கணக்குகளில் பெற்றுக்கொள்ளமுடியும். வடமராட்சியின் ஆழியவளை, நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அரியாலை, தென்மராட்சியில் - கோயிலாக்கண்டி, யாழ்ப்பாணத்தில் - கொழும்புத்துறை முதலான பகுதிகளைச் சேர்ந்த 125 குடும்பங்களுக்கே இந்த நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் ஏனைய குடும்பங்களுக்கும், உதவி பெறும் குடும்பங்களுக்கான முழு நிதியுதவியும் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)


நேர்காணல்... செல்வா, நகுலன்

# எழுத்தாளர்களை மதிக்கும் மனப்பான்மை ஈழத்து மக்களிடையே வளரவேண்டும்!

கல்வியங்காடு என்னும் கிராமத்தில் சாதாரண குடும்பத்தில் பிறந்து, கனகரத்தினம் மகாவித்தியாலயத்திலும் பின்பு மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும் உயர்தரம் வரை படித்துவிட்டு, நாடகங்களிலும் பங்குபற்றினேன். வீரசிங்கம் மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகளையும் நடத்தினேன். இந்தக் காலப் பகுதியில் 1983 ஆம் ஆண்டு தொழிலுக்காக சவுதி அரேபியா சென்று, பல வருடங்கள் கழித்து திரும்பி

**காற்றுவழி ஆவணக்காப்பகம் என்னும் பெயரில் ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகங்களை சேர்த்து வருடத்துக்கு ஒரு தடவை லண்டனில் கண்காட்சி ஒன்றை நடாத்தி வரும் எழுத்தாளர் இ.மகேந்திரன் (முல்லை அமுதன்) என்பவர் நமது ஈழநாடு அலுவலகத்துக்கு வந்தபோது அவருடன் உரையாடினோம். அவர் எங்களுடன் பகிர்ந்துகொண்ட கருத்துக்களை வாசகர்களுக்காகத் தருகின்றோம்.**

யாழ்ப்பாணம் வந்து மறு படியும் 1997 ஆம் ஆண்டு லண்டன் சென்றேன். நான் எழுத்தாளர் என்ற ரீதியிலும், எமது எழுத்துக்களைச் சந்தைப் படுத்த வேண்டும் என்ற நோக்கிலும் என்னுள் எழுநத ஆதங்கங்களால்



ஈழத்துத் தமிழ் நூல் கண்காட்சியை நடத்திவரு கின்றேன்.

ஈழத்துத் தமிழ் நூல்களை லண்டனில் பெறமுடியாத நிலை காணப்படுகின்றது. இதனைத் தவிர்க்கும் நோக்கில், அவற்றைப் பார்வைக்கு வைக்க வேண்டும் என்ற உந்துதலும், இந்தக் கண்காட்சியை நடத்தவேண்டும் என்ற உணர்வைத்தந்தது.

லண்டனில் காணப்படுகின்ற இயந்திரமயனமான வாழ்க்கையில் இலக்கியத்தைப் பேசுவதற்கு வாய்ப்பில்லாத நிலை காணப்படுகின்றது. எனினும், இலக்கியத்தைப் பேசுவதற்கு ஒரு சிறு பிரிவினர் இருந்துகொண்டே இருப்பார்கள். அந்தச் சிறு பிரிவினருக்கு பயன்படும் வகையில் கண்காட்சியை நடத்துவதன் மூலம் அந்த சிறு பிரிவு - பெரிய பிரிவினராக வளர வழி ஏற்படும். இதுவும் ஈழத்து நூல் கண்காட்சியை நடத்த ஒரு காரணமாக இருந்தது.

இந்திய எழுத்தாளர்களுடைய படைப்புக்கள் ஈழத்து இலக்கியங்களோடு போட்டிபோட்டுக்கொண்டு வெளிவருகின்றன. ஈழத்து இலக்கியகாரர்களால், இந்தியாவின் நூல் வெளியீடுகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் போவதுண்டு. இத்தகைய சந்தர்ப்பங்களில் ஈழத்து நூல்களை எழுதுகின்ற எழுத்தாளர்களால் நூலை வெளியிடுவதற்கு வசதிகள் இல்லாமல் இருக்கின்றது. நூல் வெளியீட்டு விழா நடத்தினாலும், அந்த வெளியீட்டு விழாவிலேயே எல்லா நூல்களும் விற்றுத்தீர்ந்து விடுகின்ற தன்மையும் காணப்படுவதில்லை. இந்த நிலையில் ஈழத்து எழுத்தாளர்களுக்கு ஒரு அறிமுகம் தேவையாக உள்ளது. இந்த அறிமுகத்தை ஈழத்து நூல் கண்காட்சிகள் மூலமாக ஓரளவு செய்துகொள்ள முடியும் என்பதன் வெளிப்பாடே எனது இந்த முயற்சியாகும்.

நான் நடத்துகின்ற ஈழத்து நூல் கண்காட்சியின் மூலமாக, ஈழத்து எழுத்தாளர்களுக்குப் பலவித நன்மைகள் ஏற்பட்டுள்ளன.

ஈழத்து எழுத்தாளர்கள் தமது நூல்களை வெளியீட்டு விழாவில் விற்றுத் தீர்ப்பதைவிட்டு, ஏனைய இடங்களிலும் விற்பனை செய்யக் கூடிய வாய்ப்பை கண்காட்சியின் மூலம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளேன்.

நான் ஒரு தனிநபராகக் கண்காட்சியை ஒழுங்கு செய்து நடாத்துகின்றேன். இதை ஒரு அமைப்பு ரீகியாக ஒழுங்கு செய்து நடத்துவதென்பது ஒரு மிகவும் சிக்கலானதாகக் காணப்படுகின்றது.

தமது இலக்கியகாரர்களிடையே இயல்பாகவே சில குறைபாடுகள் காணப்படுகின்றன. இந்தக் குறைபாடுகள் என்னை அமைப்பியல் ரீதியாகச் செயற்படவிடாமல் செய்திருக்கலாம் என்பதே எனது கருத்தாகும்.

அமைப்பியல் ரீதியாக நான் இதைச் செயற்படுத்தவேண்டும் என்ற சிந்தனை உடையவனாக இருந்திருந்தால், இந்தக் கண்காட்சியை நடத்தியிருக்க முடியாமல் காலந்தான் போய்க்கொண்டிருந்திருக்கும்.

ஈழத்து இலக்கிய நூல்கள் என்ற வகையில் ஏழாயிரத்து ஐநூறு நூல்கள் வரையில் என்னிடம் உள்ளன. இவையாவும் அச்சில் வெளிவந்த நூல்களாகக் காணப்படுகின்றன.



பழைய இலக்கியகர்த்தாக்களின் இலக்கியங்கள் முதல் இன்றைய கால இலக்கியப் படைப்பாளிகளின் இலக்கியங்கள் வரை பல வகையான நூல்கள் உள்ளன. குறைந்தபட்சம் இருநூறு எழுத்தாளர்களின் நூல்கள் என்னிடமுள்ளன.

வாசகன் என்ற அடிப்படையில் வன்னியிலிருந்து வெளிவருகின்ற இலக்கியங்களில் - வெளிவருகின்ற கவிதைகள் பாரதியின் கவிதைகளுக்கே உயிர்கொடுத்தான் என்று கூறலாம். பதிப்புத் துறையிலும் பல்வேறு முன்னேற்றங்களை இனங்காட்டக்கூடியதாக உள்ளது.

ஒரு படைப்பாளியின் கஷ்டங்களை உணர்ந்துகொள்ள வேண்டும். விமர்சகர்களின் பார்வைகள் வேறுபடலாம். விமர்சனங்களை வைத்து இலக்கியங்களை மதிப்பீடு செய்யக்கூடாது.

1885 ஆம் ஆண்டு வெளிவந்த மிகப்பழைய நூல்களில் இருந்து இன்று இறுதியாக வெளிவந்த நூல்கள் வரைக்கும் ஓரளவு இலக்கிய நூல்களை நான் வைத்திருக்கின்றேன். தன்னுடைய பதினெட்டாவது வயதின் பிற்பாடு தான் பார்த்த கண்காட்சிகளில் பிரமிக்க வைத்த கண்காட்சி இதுவாகத்தான் இருக்கும் என்று புலவர்மணி அவர்கள் பாராட்டியுள்ளார். இந்த வகையில் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஏனெனில், புலவர்மணி அவர்கள் பழம்பெரும் இலக்கியவாதி. ஆத்மார்த்தமாக இலக்கியங்களை நேசிப்பவர். அவரின் பாராட்டைப் பெற்றமை எனக்கும் மிகவும் மகிழ்ச சியாக இருந்தது.

கவிதைகளில் காதல் கவிதைகளை முற்றுமுழுதாக ஒதுக்கி வைத்துவிட முடியாது. ஏனெனில் ஆரம்பத்தில் காதல் கவிதை களை எழுதிய கவிஞர்களே பின்னர் பெருங்கவிகளாக மாறியுள்ளனர். காதல் எனபது ஒரு உணர்வு. அந்த உணர்வை அழகாக வெளிப படுத்தும்போது நல்ல இலக்கியமாக மாறுவதைக் காணலாம்.

நான் இதுவரை பதினொரு நூல்கள் வரை வெளியிட்டுள் ளேன். நான் எழுதிய முதலாவது நூல் எனக்கு மிகவும் ஆத்மதிருப்தியைத் தந்த நூலாக இருக்கின்றது. "நித்திய கல்யாணி" என்ற நூலே அதுவாகும். சிரித்திரனின் ஆசீர்வாதத்தால் அந்த நூல் வெளிவந்தது.

நித்தியகல்யாணி என்ற எனது நூலில் பல அம்சங்களும் உள்ளன. அதில் காதல், வீரம், கோபம் முதலிய உணர்வுகளும் உள்ளன. யாவற்றையும் உள்ளடக்கிய ஒரு நூலாக அது விளங்கியதால், எனக்கு அந்த நூல் மிகவும் திருப்தியாய், இருந்தது.

'இசைக்குள் அடங்காத பாடல்கள்' என்ற கவிதை நூலை அண்மையில் இறுதியாக வெளியிட்டேன்.

ஒவ்வொரு வருடமும் செப்ரெம்பர் மாதத்தில் நடத்தப்படும் ஈழத்துக் கண்காட்சிக்குரிய நூல்களை எடுக்கும்போது பல தரப்பினரிடமும் அறிவிப்புச்செய்து, நூல்களைப் பெற்றுக்கொள்வேன்.

எழுத்தாளர்களை நாடுவதை விடவும், புத்தகசாலைகளையே பெரிதும் நாடுவேன். இல்லையென்றால் பத்திரிகைகள் மூலமாக விளம்பரம் செய்துகொள்வேன். பூபால சிங்கம், வசந்தம் புத்தக நிலையம் ஆகியவற்றில் பெரும்பாலும் நூல்களைப் பெற்றுக்கொள்வேன்.

இரத்தினசபாபதி அல்லது மதிவானன் எழுதிய "யுகசந்தி" என்ற நூல் இன்னமும் எம் மனதில் நிற்கின்ற புத்தகமாகும். இது தற்போது என்னிடமில்லை தொலைந்துவிட்டது. வ.அ.இராசரத்தினம் எழுதிய நூல்களும் எனக்கு மிகவும் பிடித்தமான இலக்கியங்களாகும்.

மண்வாசனையை வெளிப்படுத்தும் விதமாக தாமரைச்செல்வி எழுதிய நூல்களையும், நான் மிகவும் விரும்பி வாசிப்பேன். எங்கு போனாலும் நாம் வேரை மறந்து விடக்கூடாது என்பதில் கருத்துடையவர்களாக இருக்கவேண்டும்.

ஈழத்து எழுத்தாளர்களின் நூலகளை வாசிக்கவேண்டும் என்ற உந்துதலை ஒவ்வொருவரும் தமது மனதிலே கொண்டிருக்க வேண்டும.

எழுத்தாளர்களை மதிக்கும் மனப்பாங்கு வளராமை ஈழத்தில் காணப்படுகின்ற பெரும் குறைபாடாக உள்ளது.

வெளிநாட்டில் இத்தகைய நூல கண்காட்சியை செய்யும் போது,




ஈழத்திலும் இப்படிப்பட்ட கண் காட்சியை நடத்தவேண்டும் என்ற சிந்தனை ஏற்படுவதுண்டு. முதலில் நான் இலங்கையில் வந்து இருக்க வேண்டும்.

ஈழத்தில் வெளியாகும் நூல்களை ஈழத்தில் படிக்காமல்விட்டு, ஏனைய நாடுகளில் அவை படிக்கப்படுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படுவதையிட்டு, ஈழத்து வாசகர்களுக்கு கவலை ஏற்படுவதில் நியாயம் உண்டு.

ஈழத்து நூல்களை ஈழத்தில் படிக்கவேண்டும் என்ற சிந்தனை முதலில் தோன்ற வேண்டும். அதற்குரிய முயற்சிகள் கட்டாயம் எடுக்கப் படவேண்டியது அவசியமானது.

நாம் இதுவரை லண்டனில் ஈழத்து நூல் கண்காட்சிகள் ஐந்து நடத்திமுடித்துள்ளோம். இனியும் இநத முயற்சி தொடர்ந்துகொண்டே இருக்கும்.

இராணுவக்கெடுபிடிகள் காரணமாக - வன்னியில் வெளிவந்த நூல்களை புலம்பெயர்ந்த பலர் பார்த்திருக்க நியாயம் இல்லை. அவ்வாறான இலக்கியங்களை நாம் தற்போது கண்காட்சிகள் மூல மாக வெளிப்படுத்தியுள்ளோம்.

ஈழத்து நூல் கண்காட்சியின் போது விற்பனைக்காக நூல் களை வைத்திருப்போம். சில நூல்கள் ஆவணக்காப்புப் பகுதிக் கெனவும் நாங்கள் வைத்துக் கொண்டு தான் நூல்களை விற்பனை செய்வோம்.

என்னுடைய இந்த முயற்சியைக் கண்டு, பலர் தற்போது ஆதங்கப்படுகின்றனர். "நான் முதலில் செய்ய வெளிக்கிட்டனான் இவன் செய்து போட்டான்" என்ற மாதிரியாக கதைக்கத் தொடங்கிவிட்டார்கள். இவ்வளவு காலமும் பேசாமல் இருந்தவர்கள் தற்போது இத்தகைய விமர்சனங்களை முன்வைக்கின்றார்கள். செயற்படுத்துவதை விட்டுவிட்டு விமர்சனங்களைக் கூறுவதே இவர்களுக்கு வாடிக்கையான விடயங்களாகிவிட்டது.

சாதாரண வாசகன், எழுத்தாளன், படைப்பாளி என்ற அடிப்படையில மற்றைய எழுத்தாளர்களையும் மதிப்பளித்துப் பழகத்தெரிந்து கொள்ள வேண்டும் என்பதையே கூறவிரும்புகின்றேன் என்று கூறிமுடித்தார்.

## நூல் நோக்கு




**நூலின் பெயர்:** நிதிக்கணக்கீட்டின் வினாவங்கி
**எழுதியவர்** : டா.சாம்
**வெளியீடு** : டானியல் மெமோரியல் வெளியீடு
**விலை** : 1300/-

ஒரு பாடத்தைக் கற்கும் பொழுது, அதனுடன் சம்பந்தப்பட்ட அனைத்துப் பாட விடயங்களையும் கற்றுக் தெளிந்து பின்னர், அவை சார்ந்த வினாக்கள் எழுப்படும் பொழுது பதிலளிக்கக் கூடியவர்களாக மாணவர்கள் இருக்க வேண்டும். ஆனால் இன்று பெரும்பாலான கற்றல் செயற்பாடுகள், பரீட்சையை மையப்படுத் தியே கற்பிக்கப்படுகிறது.

கலவி கற்பது, பரீட்சையில் சித்தி அடைவதற்கு மட்டுமே என்ற நோக்கிலேயே பார்க்கப்படுகின்றது. இது குறிதத காலத்தில், பாடத்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டு, மாணவர்கள் சித்தி அடைந்தால் காணும் என்ற மனப்போக்கிற்கு இட்டுச்செல்கிறது. இதனால் பல மாணவர்கள் பாடங்களில் முறையான தெளிவு, பயிற்சி இன்றிப் படித்து சித்தியடைகிறார்கள். இதனுடைய பின் விளைவுகளை அவர்கள் பணி செய்யும் காலத்தில் எதிர்நோக்க வேண்டி ஏற்படுகிறது.

எனவே, கற்றல் செயற்பாடுகள் அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டுமெனில் அந்தந்தப் பாடம் சார்ந்த பயிற்சிகள் அவசியம். பயிற்சிகளை மேற்கொள்ளும் பொழுது மதிப்பீடு நிகழ்கிறது. மாணவர்களும் தம்மைத்தாமே சோதித்தறிய முடிகிறது.

பின்னர் அந்தக் கற்றல் செயற்பாடும் மாணவர்களுக்கு பூரணமாகிறது.

இதனை நிறைவு செய்யும் வகையில், இலங்கையில் முதல் தடவையாக நிதிக் கணக்கீட்டின், புதிய பாடத்திட்டத்தின், முழுப் பாட அலகுகளை உள்ளடக்கியதாக நிதிக் கணக்கீட்டின வினா வங்கி வெளிவந்துள்ளது. தமிழ் மொழியில் இவ்வாறான பயிற்சிப் புத்தகம் ஒன்று அனைத்து நிதிக்கணக்கீட்டு பாடவிதானத்தைத் தன்னகத்தே கொண்டு வெளிவந்திருப்பது துறைசார் மாணவர்கள், ஆசிரியர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.

இதுவரை மாணவர்கள் கணக்கீட்டைக் கற்கவில்லையென்ற எடுகோளுக்கமைய, இந்த நூல் சிறிய பயிற்சிகளிலிருந்து தொடங்கும் வகையில் தயாரிக்கப்படடுள்ளது. மேலும் ஒவ்வொரு பகுதயும் அந்தந்த அலகுக்குரிய அனைத்துப் பயிற்சிக் கணக்குகள், விடை எழுதும் வினாக்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளன்மயானது, மாணவர்களுக்கு நன்மையளிக்கக் கூடிய ஒன்றாகும்.

அத்துடன், இந்த நூலுடன் மேலதிகப் பயிற்சிகள் சேர்க்கப்பட்ட 'சீடி ஹொம' வழங்கப்பட்டுள்ளது. எட்டுக்கு மேற்பட்ட நிதிக் கணக்கீட்டு தேர்வுக்குப் பயன்படக்கூடியவாறு இந்த வினாவங்கி தொகுக்கப்பட்டுள்ளது.

துறைசார் மாணவர்கள், ஆசிரியர்கள் கட்டாயம் வைத்திருக்க வேண்டிய அரிய நூல் இது. பாடசாலைகள் இந்த நூலை தமது நூலகங்களில் வைத்திருப்பது, இதனைக் கொள்வனவு செய்ய முடியாத மாணவர்களுக்குப் பயனுள்ளதாக அமையும்.

- இரா.சுபோதினி

# ஆப்கானில் கடும் மோதல் 50 தலிபான்கள் உயிரிழப்பு

பாகிஸ்தான் எல்லையையொட்டிய ஆப்கானிஸ்தான் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதலில் 50 தலிபான் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா நடத்திய தாக்குதலில் தப்பியோடிய அல்கொய்டா மற்றும் தலிபான் தீவிரவாதிகள் பாகிஸ்தான் எல்லையை ஒட்டிய பகுதிகளில் பதுங்கியுள்ளனர். அவர்களைத் தேடும் பணியில் அமெரிக்கப் படைகளும், ஆப்கான் வீரர்களும் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை காலை கோஸ்த் என்னுமிடத்தில் ஆப்கானிஸ்தான் வீரர்களுக்கும், தலிபான் தீவிரவாதிகளுக்கும் இடையே திடீர் மோதல் ஏற்பட்டது. ரொக்கெட்டுக்கள், பீரங்கி, இயந்திரத் துப்பாக்கிகள், கையெறி குண்டுகளுடன் 50 தீவிரவாதிகள் தாககினர். இதில் தலிபான்கள் இரண்டு பேரும், ஆப்கான் ராணுவத்தினர் இரண்டு பேரும் பலியாகினர்.

பின் ஐந்து மணிநேரம் கழித்து 50 தீவிரவாதிகள், மீண்டும் அதே பகுதிக்கு வந்து அதிரடித் தாக்குதல் நடத்தினர். அப்போது, ஆப்கான் படை வீரர்களுக்குத் துணையாக அமெரிக்க ஹெலிகொப்டர்கள் மற்றும் போர் விமானங்கள் தாக்குதலில் ஈடுபட்டன.

இந்தச் சம்பவத்தில் எத்தனை பேர் இறந்திருப்பார்கள் என்று சரியாகத் தெரியவில்லை. ஆனால், 40 முதல் 50 தீவிரவாதிகள் இறந்திருக்காலம் என அமெரிக்க ராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

# அயர்லாந்து பொறியியலாளர் சவுதியில் சுட்டுக்கொலை!



சவுதியின் தலைநகர் றியாட்டில் பணியாற்றி வந்த அயர்லாந்துப் பொறியியலாளர் ஒருவர் இஸ்லாமியக் கிளர்ச்சியாளர்கள் எனச் சந்தேகிக்கப்படுவோரால் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்டவர் அந்தோனி கிறிஸ்தோப்பர் ஹிக்கின்ஸ் (வயது 63) என்பவரென அயர்லாந்து செய்திகள் தெரிவித்தன.

சவுதியின் தலைநகர் றியாட்டிலுள்ள அரசிற்குச் சொந்தமான ஓயில் கம்பனி ஒன்றின் அலுவலகத்தில் இவர் தனது வழமையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தவேளை, நேற்றுமாலை திடீரென ஆயுதத்துடன் உள்நுழைந்த இஸ்லாமிய ஆயுததாரிகள் இவர்மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச்சென்றதாக சவுதித் தகவல்கள் தெரிவித்தன.

ஆனாலும், இரண்டு ஆயுததாரிகளே அலுவலகத்தினுள் பிரவேசித்து தாக்குதலை நடத்தியதாக சவுதி அதிகாரிகள் தெரிவித்தனர்.


பொறியியலாளரின் தலையிலும், மார்பிலும் நான்கு தடவைகள் சுடப்பட்டதற்கான தடயங்கள் இருப்பதாக ஏ.எப்.பி.செய்தி நிறுவனம் தெரிவித்தது. ஆயுததாரிகள் புதிய இலக்குகளைத் தேர்ந்தெடுத்துத் தாக்குதலை மேற்கொள்வதாகவும், இதனை சவுதி அரசாங்கம் முறியடிக்கும் எனவும் சவுதி அதிகாரிகள் தெரிவித்தனர்.

# புதன் கிரகத்தை நோக்கி பாய்ந்தது 'மெசஞ்சர்'

(வொஷிங்ரன்)

புதன் கிரகத்தின் மர்மங்களை அறிவதற்காக நாசாவின் மெசஞ்சர் செயற்கைக்கோள் நேற்றுமுன்தினம் அந்தக் கிரகத்தை நோக்கி, விண்ணில் பாய்ந்து சென்றது.

சூரியனுக்கு மிக அருகிலுள்ள புதன் கிரகத்தைப் பற்றி ஆராய்ச்சி செயவதற்காக, அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகள் மெசஞ்சர் என்ற செயற்கைக்கோளைத் தயாரித்தனர். ஆயிரத்து 921 கோடி ரூபா செலவில் தயாரிக்கப்பட்டுள்ள மெசஞ்சர் செயற்கைக்கோள் நாசாவின் ஏழாவது படைப்பு.



புதன் கிரகத்தின் தரை தளம், விண்வெளி, சுற்றுச்சூழல், புவி வேதியியல், மலைப் பிரதேசங்கள் ஆகியவற்றைப் பற்றி ஆராய்ச்சி செயயும் இந்தச் செயற்கைக்கோளை கடந்த திங்கட்கிழமை விண்ணில் செலுத்துவதாக இருந்தது.

ஆனால், மோசமான வானிலை காரணமாகச் செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டது. வானிலை சீரானதும் இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் பகல் 12.16 மணிக்கு விண்ணில் ஏவப்பட்டது.

புளோரிடா மாகாணத்தில் உள்ள கேப் கெனவரல் ஏவுதளத்தில் இருந்து டெல்டா - 2 என்ற ரொக்கட் மூலம் இது விண்ணில் சீறிப் பாய்ந்தது.

இந்த மெசஞ்சர் செயற்கைக்கோள் சூரியமண்டலம் வழியாக ஏழு ஆண்டுகள் பயணஞ்செய்த பின்னர் புதன் கிரகத்தைச் சென்றடையும். இந்தப் பயணத்தின்போது 15 முறை சூரியன் அருகிலும், ஒரு முறை பூமி அருகிலும், இருமுறை சுக்கிரன் கிரகத்தின் அருகேயும், மூன்றுமுறை புதன் கிரகத்தின் அருகேயும் செல்லும்.

அந்தக் கிரகங்கள் தொடர்பான புகைப்படங்களைப் பூமிக்கு அனுப்பி வைக்கும். ஏழு ஆண்டுகள் பயணத்தின் பின்னர் புதன் கிரகத்தைச் சென்றடையும் இந்தச் செயற்கைக் கோள், ஒரு வருடகாலம் புதன் கிரகத்தின் சுற்றுவட்டப் பாதையில் பயணஞ்செய்து, அந்தக் கிர்கம் தொடர்பான பல தகவல்களைப் பூமிக்கு அனுப்பிவைக்கும்.

சூரியனுக்கு மிக அருகிலுள்ள புதன் கிரகத்தில் மறைந்துள்ள பல அரிய ரகசியங்களை மெசஞ்சர் செயற்கைக்கோள் அனுப்பும் தகவல்கள்மூலம், தாம் அறிந்து கொள்ளலாம் என விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

# இஸ்ரேல் ஹெலிகள் தாக்குதல் 3 பலஸ்தீன பொதுமக்கள் காயம்

காஸாப்பகுதியில் இஸ்ரேல் ஹெலிகொப்டர்கள் நடத்திய ஏவுகணைத்தாக்குதலில் மூன்று பலஸ்தீனப் பொதுமக்கள் காயமடைந்ததாக சம்பவத்தை நேரிற்கண்ட பலஸ்தீனப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

இநதச் சம்பவம் இஸ்ரேல் படையினர் இஸ்லாமிய ஆயுததாரிகளுக்கு எதிராகத் தமது படை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நகரான பீற் கனொன் பகுதியில் இடம்பெற்றது.

ஆனால், கடைசியாக நடந்த இந்தச் சம்பவம் தொடர்பாக இஸ்ரேல் இராணுவம் எதனையும் தெரிவிக்கவுமில்லை, உறுதிப்படுத்தவுமில்லை.

இஸ்ரேலின் புல்டோசர்கள் மற்றும் ஆயுதம் தரித்த வாகனங்கள் ஜபாலியா அகதிகள் முகாமிற்கு அருகிலுள்ள பீற் கனொன் பகுதியில் நிறுத்தப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய வானொலி தெரிவித்தது.

அண்மைக்காலமாக இஸ்ரேல் படையினர் இஸ்லாமியப் போராளிகளை ஒடுக்குவதற்காக, பலஸ்தீனப பகுதிகளில் படை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமையால் பலஸ்தீனப் பகுதிகளிலுள்ள பெருமளவு கட்டடங்கள் அழிக்கப்பட்டுளளதுடன், பல அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டும் வருகின்றனர்.




# ஆப்கானில் நடத்திய குண்டுவீச்சு குறித்த அமெரிக்க விமானியின் முறையீடு நிராகரிப்பு

ஆப்கானில் நிலைகொண்டுள்ள கனடாப் படையினர் மீது 2002 ஆம் ஆண்டு தவறுதலாக விமானத் தாக்குதல் நடத்தி நான்கு படையினரைக் கொன்று மேலும் எண்மரைப் படுகாயப்படுத்திய அமெரிக்க விமானி ஹரிசிமித்திற்கு விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து அவர் செய்த முறைப்பாடு நிராகரிக்கப்பட்டது.

இவருக்கு வழங்கப்பட்ட தீர்ப்பில், எதிர்வரும் காலங்களில் இவர் அமெரிக்க விமானப்படையில் விமானங்களைச் செலுத்த முடியாதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாப் படையினர் பயிற்சியை முடித்து வந்துகொண்டிருந்த வேளையே, இந்த விமானி தவறுதலாக விமானத் தாக்குதலை மேற்கொண்டார்.

ஆனால், தலிபான் போராளிகள் விமானத்தை நோக்கித் தாக்குதல் நடத்துவதாக நினைத்தே தான் கனடாப் படையினர் மீது தவறுதலாக விமானத் தாக்குதல் நடத்தியதாக விமானி தெரிவித்தார்.

அத்துடன், கந்தகார் விமான நிலையத்திற்கு அருகில் கனடாப் படையினர் பயிற்சி பெறுவது தொடர்பாகத் தனது மேலதிகாரி தனக்கு முன்னரே தெரிவிக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

நீதிமன்றின் இந்தத் தீர்ப்பு, இந்தப் பிரச்சினையை ஒரு முடிவிற்கு கொண்டுவந்துவிட்டதாக அமெரிக்க விமானப்படையின் அறிக்கை தெரிவித்தது.

இந்தத் தீர்ப்பையிட்டு தாம் ஆச்சரியப்படவில்லை எனவும், இதனை தாம் எதிர்பார்த்ததாகவும் சிமித்தின் சட்டத்தரணி தெரிவித்தார்.

வேறொரு எந்த வகைத் தீர்ப்பும் இவரைக் குற்றமற்றவரெனக் காட்டியிருக்குமெனவும், இவரது குற்றத்தைக் களைவதற்கு எதிர்காலத்தில் வேறுபல நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# அபூர்வ குரங்கின் பிறந்தநாள் விழா



(சிட்னி)

அபூர்வ இனமான ஒராங்குதான் குரங்கு வகைகள் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்துவருகின்றன. இதைத் தொடர்ந்து, அந்தவகைக் குரங்குகளைப் பாதுகாக்க பல்வேறு நாடுகளும், பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகின்றன.

செயற்கைக் கருத்தரிப்பு முறைகள் மூலம் இந்தக் குரங்கு இனத்தைப் பெருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவுஸ்ரேலியாவின் மெல்பேர்ன் நகரில் உள்ள வன உயிரியிற் பூங்காவில் செயற்கை முறைக் கருத்தரிப்பு மூலம் பிறந்த ஒராங்குதான் குரங்குக்கு 1 வயது ஆகிறது. இதன் முதலாவது பிறந்த நாள் விழா அந்தப் பூங்காவில் உள்ள மற்றக் குரங்குகளுக்கும் கேக் வழங்கி கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

அந்தக் குட்டி குரங்கு கயிற்றில ஏற, தாய்க் குரங்கு பயிற்சி அளிக்கும் காட்சி)

# அபுகிறாப் கைதிகள் துன்புறுத்தல்; பகிடியாகச் செய்யப்பட்ட ஒன்றாம்

## பெண் சிப்பாய் நீதிமன்றில் தெரிவிப்பு

அபுகிறாப் சிறையிலுள்ள ஈராக் கைதிகளை நிர்வாணமாக்கி அவர்களைப் படம் பிடித்தது பகிடியாக மேற்கொள்ளப்பட்டதென அமெரிக்கப் பெண்சிப்பாய், இராணுவ நீதிமன்ற விசாரணையாளர்களிடம் தெரிவித்தார்.

லிண்டா இங்லண்ட் என்ற இந்தப் பெண் சிப்பாய் மீது - கைதிகளை நிர்வாணமாக்கியது, பின்னர் போட்டோ எடுத்தது உட்பட பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இவர் மீது எவ்வாறான தண்டனை வழங்கலாம் என்பதனை ஆராய்வதற்கு நீதிமன்றம் நேற்றுக் கூடவிருந்தது. சில வேளைகளில் இவருக்கு 38 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கபடலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், கைதிகள் மீதான துன்புறுத்தலை மேலதிகாரிகளின் உத்தரவுக்கமையவே லிண்டா செய்ததாக அவரது சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

லிண்டாவும் மற்றும் ஏழு படையினரும் கைதிகள் மீதான இந்த நடவடிக்கையை ஒரு பகிடியாகவே எடுத்ததாகவும், அவர்கள் இது ஒரு பெரிய விடயமாக வருமென்று நினைக்கவில்லை எனவும் விசாரணையாளரான போல் ஆதர் தெரிவித்தார்.

# ஈராக்கில் கடத்தப்பட்ட ஜோர்தான், துருக்கி நாட்டவர் 6 பேர் விடுதலை செய்யப்பட்டனர்

ஈராக்கில் வைத்துக் கடத்தப்பட்ட நான்கு ஜோர்தானியர், இரண்டு துருக்கி நாட்டுச் சாரதிகள் என அறுவர் இஸ்லாமியக் கிளர்ச்சியாளர்களால் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை கடத்தப்பட்ட இவர்கள் ஐந்து நாட்களின் பின்னர் பலூஜாவின் மேற்குப் பகுதியில் வைத்து விடுதலை செய்யப்பட்டனர்.

கடத்தப்பட்டு வைத்திருந்த வேளை தாம் எந்தவித துன்புறுத்தல்களுக்கும் ஆளாக்கப்படவில்லையென விடுதலையான சேக் காஜ் இப்ராகிம் தெரிவித்தார்.

இரண்டு துருக்கியச் சாரதிகளும் பணிபுரிந்த துருக்கிய கம்பனி ஈராக்கிலிருந்து வெளியேறுவதாக அறிவித்ததையடுத்தே, இவர்கள் இருவரும் விடுதலை செய்யப்பட்டதாக, அல் - ஜசீரா தொலைக் காட்சி தெரிவித்தது.


# 'சோலர் கார்' பந்தயம்

(டோக்கியோ)

பெற்றோல் விலை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டே போகிறது. சுற்றுச் சூழல் பாதிப்பும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகிறது. இதைத் தொடர்ந்து சூரிய சக்தியைப் பயன்படுத்தி இயங்கும் கார்களை உருவாக்கிவருகின்றனர்.

ஜப்பானின் சுசுக்கா நகரில் சூரிய சக்திக் கார்களின் (சோலர் கார்) பந்தயம் நடந்தது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 30 சோலர் கார்கள் இதில் கலந்து கொண்டன.

பந்தயம் நடந்த நேரத்தில் சூரிய



வெளிச்சம் மிக குறைந்துவிட்டதாலும், சூரிய சக்திப் பற்றறி செயற்படாமற் போனதாலும் ஒரு சோலர் கார் நடுவழியில் செயலற்று நிற்கும் காட்சி.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தேவைப்படும் போதெல்லாம் அரசாங்கத்தை ஆதரிப்போம்!

## ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

தேவையான நேரங்களிலெல்லாம் அரசாங்கத்துக்கு ஆதரவளிப்போம் என ஜாதிக ஹெல உறுமயக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் நேற்று முன்தினம் நாடாளுமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தெரிவித்தார்.

எதிர்வரும் காலத்தில் அரசினால் சமர்ப்பிக்கப்படவுள்ள நிதி மசோதா உள்ளிட்ட முக்கியமான திட்டங்களுக்கு ஜாதிக ஹெல உறுமய ஆதரவளிக்கவுள்ளது.

நாட்டில் ஜனநாயகத்தைக் கட்டியெழுப்பி பயங்கரவாதத்தை விரட்டியடிக்க தீர்மானித்துள்ள அரசை என்றும் பாதுகாக்க நாம் துணை நிற்போம்

கட்சியின் உயர்பீட கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய நாம் அரசின் முன்மாதிரியான நல்ல செயற்பாட்டுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளோம்.

விடுதலைப் புலிகள் கடைப்பிடிக்கும் இறுக்கமான நடைமுறைகளும், சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்ச உணர்வுமே அரசை நாம் ஆதரிக்கக் காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

## அமெரிக்காவின்...

இதேவேளை - அமெரிக்கத் தளபதி இராணுவத் தலைமையகத்தில் சிரேஷ்ட இராணுவத்தளபதிகளையும் சந்தித்து இலங்கையின் தற்போதைய நிலைமைகள் மற்றும் சமாதான முயற்சிகள், இராணுவ நிலைவரங்கள் குறித்தும் கேட்டறிந்ததாகக் கூறப்படுகிறது.

இவரது இந்த விஜயம் குறித்த தகவல் முன்கூட்டியே அமெரிக்க தூதரகத்தாலோ, அல்லது அமெரிகக்ப் பாதுகாப்புத் திணைக்களத்தாலோ வெளியிடப்படவில்லை.

அத்துடன் இவர் எத்தனை நாட்கள் இலங்கையில் தங்கியிருப்பார் என்றோ, இவரது இந்த விஜயத்தின் நோக்கம் என்ன என்பது குறித்தோ இதுவரை உத்தியோகபூர்வமான எந்தத தகவலும் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## பேச்சு நடத்த...

விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்துவது என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்று ஜனாதிபதி சந்திரிகா உறுதிபடத் தெரிவித்திருப்பதாக ஜனாதிபதி செயலகம் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே கூறப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் கையளித்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனையின் அடிப்படையில் பேச்சுக்களை நடாத்த ஜனாதிபதி மறுத்துள்ளதாக வெளியான செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் வெளியான செய்தி முற்றிலும் தவறானது என்றும். தான் அப்படி எதுவும் கூறவில்லை என்றும் மைத்திரிபால சிறிசேனவும் மறுப்பு வெளியிட்டுள்ளார்.

இடைக்கால தன்னாட்சி அலகின கீழ் பேச்சு நடத்துவது குறித்த ஜனாதிபதியின் கருத்தில் மாற்றமில்லை என்றே, தான் குறிப்பிட்டதாகவும் அது முற்றிலும் திரிவுபடுத்தப்பட்டு ஜனாதிபதி இதற்கு மறுப்புத் தெரிவித்தது போல செய்தி வெளியாகியுள்ளது என்றும் குறிப்பிட்ட பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

## வன்னிப்பகுதி விபத்தில்...

ருந்து மணல் ஏற்றிவந்த டிப்பர் ரக வாகனம் வீதியால் சைக்கிளில் சென்ற வயோதிபருடன் மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதேவேளை, கிளிநொச்சி கனகபுரம் வீதியில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் ஒருவர் காயமடைந்தார். மோட்டார் சைக்கிள் ஒன்றும் மிதி வண்டியும் மோதிக்கொண்டதில் இந்த விபதது ஏற்பட்டது.

இதன்போது அம்பாள்குளத்தைச் சேர்ந்த க.இராசரத்தினம் என்பவர் காயமடைந்தார்.

நேற்றிரவு 7.45 மணியளவில் கிளிநொச்சி 155 ஆம் கட்டை பகுதியில் இடம்பெற்ற மற்றுமொருமோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் பாடசாலைக்கு எதிரில் ஏற்பட்ட வீதி விபத்தில் இருவர் காயமடைந்தனர். இவர்கள் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### நிதி அமைச்சர் சரத் அமுனுகம தலைமையில்

# அரசின் அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பதற்கு குழு அமைப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கத்தின் எதிர்கால அபிவிருத்தி செயற்திட்டங்களைத் தயாரிப்பதற்கான விதம் குறித்து, இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை தயாரித்து சமர்ப்பிப்பதற்காக நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தலைமையிலான குழுவொன்றை நியமிப்பதென கடந்த திங்கள் இரவு கூடிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக்குழு தீர்மானித்துள்ளது.

நிதியமைச்சரை தலைவராகக் கொண்ட இந்தக் குழுவிற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளிலிருந்தும் இரண்டு பேர் தெரிவு செய்யப்படுவர்.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் கடந்த திங்கள் மாலை ஆறு மணிக்கு ஆரம்பமான இந்த நிறைவேற்றுக்குழுக் கூட்டம் இரவு 11 மணிவரை நடைபெற்றது.

இந்த மாத முடிவிற்குள் பட்டதாரிகளுக்கு தொழில் வழங்குதல், உயர்தரம் சித்தியடைந்தவர்களுக்குத் தொழில் வழங்க ஆரம்பித்தல், எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் பொருளாதாரத்தில் தற்போது நிலவும் நிலவரத்தின் மீது மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள், பொதுமக்களது வருமானத்தை உயர்த்த எடுக்கவேணடிய நடவடிக்கைகள் போன்றன தொடர்பாக இந்தக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

அரச ஊழியர்களது சம்பளத்தினை அதிகரிப்பது தொடர்பாக திஸ்ஸ தேவேந்திர சமர்ப்பித்துள்ள ஆலோசனைகளுக்கு அமைய, ஜனவரி மாதம் தொடக்கம் அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை அதிகரித்தல் போன்றவை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

நாடு முழுவதிலுமுள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்கள் 25 ஆயிரம் பேரிடமிருந்து அந்தப் பிரதேசங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளோடு தொடர்புடைய தொழில்களை உண்டாக்கக் கூடிய செயற்திட்ட அறிக்கையையும், பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் கவனத்தில் எடுக்கப்பட்டது. (தே)

## பட்டதாரிகளுக்கான நியமனம் அடுத்த பட்டியல் மாத இறுதிக்குள்

### நிதியமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்க அரசாங்கத் திட்டத்தின் கீழ் அடுத்தகட்டமாக தெரிவு செய்யப்படவுள்ளவர்களின் பட்டியலை இம்மாத இறுதிக்குள் வெளியிடவிருப்பதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

பெயர் பட்டியலில் இடம்பெறவுள்ளவர்கள் ஏற்கனவே தொழில் வாய்ப்புப் பெற்றிருந்தால், அது குறித்து நிதியமைச்சின் முகாமைத்துவப் பிரிவுக்கு அறிவிக்குமாறு அதன் பணிப்பாளர் நாயகம் எச்.பந்துரத்ன கேட்டுக்கொண்டுள்ளார்.

இதில் தெரிவுசெய்யப்படும் பட்டதாரிகளுக்கு 3 மாத பயிற்சி வழங்கப்படவுள்ளது. விண்ணப்பதாரிகளுக்கு அவர்கள் வதிவிடமுள்ள மாவட்ட பயிற்சி நிலையங்களிலேயே இந்தப் பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சியின்போது அனைத்துக் கொடுப்பனவுகள் உட்பட 6 ஆயிரம் ரூபா வழங்கப்படும். 3 மாத பயிற்சியின் பின்னர் அவர்கள் மேலதிக பயிற்சிக்காக அமைச்சுக்களில் நியமிக்கப்படவுள்ளனர்.

## இரு சிறுமிகள் ஒப்படைப்பு

மன்னாரில் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணையச்சென்ற இரு சிறுமிகள் பெற்றோர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டனர்.

பேசாலை நான்காம் வட்டாரத்தைச் சேர்ந்த இரு சிறுமிகளும் விடுதலைப்புலிகளுடன் இணைந்து கொள்ளப்போவதாக மன்னார் அரசியற்துறை அலுவலகத்திற்கு சென்றிருந்தனர்.

18 வயதிற்குட்பட்ட மேற்படி இரு சிறுமிகளையும், யுனிசெப் நிறுவனம் மற்றும் கண்காணிப்புக்குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் முன்னிலையில் பெற்றோர்களிடம் மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன் ஒப்படைத்தார். (201)

## கருணா குழு...

உயிரிழந்தவரின் சடலம் செங்கலடி வைத்தியசாலையின் பிரேதச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

## புலிகளுடன் பேச்சுக்களை...

கருத்தரங்கில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய அமைப்பு - இந்தக் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தது.

இடைக்கால நிர்வாக சபை ஊடாக புலிகளுக்கு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தனியான அரசாங்கம் ஒன்று வழங்கப்படும். குறிப்பாக விடுதலைப் புலிகளின் இராணுவம், நீதிமன்றம் ஆகியவை சட்டரீதியாக மாற்றப்படும். அதேபோன்று நிர்வாகம், காணி அதிகாரம் உட்பட பல அதிகாரங்கள் இடைக்கால நிர்வாக சபை ஊடாகப் புலிகளுக்கு வழங்கப்படும்.

எனவே, உயிர்களைத் தியாகம் செய்த இராணுவ வீரர்களுக்கு சாட்சியாக நாட்டின் நிர்வாகத்தை ஜாதிக ஹெல உறுமயவின் எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கவேண்டியது முக்கிய பொறுப்பு. அவ்வாறு செய்யாதுவிடின் எதிர்காலச் சந்ததியினருக்கு நாட்டின் ஒரு பகுதி எஞ்சாது என்றும் அவா மேலும் தெரிவித்தார்.

## வாதிட வழக்கறிஞர்...

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைகக்கப்பட்டார். இதற்கான உத்தரவை யாழ்.மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா வழங்கியிருந்தார். எனினும், நேற்று வழக்கு விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டபோது ராஜபக்ஷ சார்பாக வழக்கறிஞர்கள் எவரும் ஆஜராகவில்லை.

இலங்கை சட்ட உதவி மன்றத்தின் வழக்கறிஞர்களோ, தமிழ் வழக்கறிஞர்களோ இவருக்காக நீதிமன்றில் ஆஜராக மறுத்துவிட்டனர்.

இதனால், வழக்கறிஞர் ஒருவரைத் தனக்காக வாதாட நியமித்து அழைத்து வர ஒழுங்கு செய்யுமாறு கோரிய ராஜபக்ஷவை அடுத்த மாதம் 30 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறும், அதுவரை கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையில் அவரை விளக்க மறியலில் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

இதனையடுத்து நேற்று லான்ஸ் கோப்ரல் ராஜபக்ஷ விமானம் மூலம் கொழும்புககுக் கொண்டு செல்லப்பட்டு வெலிக்கடைச் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டுளளார். (ப)

## ஆளும் கூட்டணி...

சுதந்திரக்கட்சியை மீண்டும் தனிக் கட்சியாக இயங்கவைப்பது ஜே.வி.பியின் அழுத்தங்களை வேறுவிதமாக கையாள முடிவெடுத்துள்ளமை இடைக்கால ஜனாதிபதி ஆட்சியை அறிவித்து நாடாளுமன்றத்தை இடைநிறுத்துவது போன்ற சில இரகசிய அரசியற் காய்நகர்த்தலுக்காகவே சந்திரிகா இந்தப் பதவி விலகலைப் பயன்படுத்தவுள்ளதாக கருதப்படுகின்றது.

இதற்கிடையில் இந்தப் பதவி விலகலின் மூலம் ஜனாதிபதி கதிரையில் தனக்கு விசுவாசமுள்ள வேறு ஒரு நபரை உட்காரவைத்து, தான் பிரதமராகும் திட்டமும் அதன் மூலம் நாடாளுமன்றத்தைத் தன் தலைமையில் நடத்தி ஜனாதிபதி முறையை இல்லாமற்செய்து விடுவது சந்திரிகாவின் தற்போதய அவசர ரகசிய திட்டமாக அமைகிறது என்றும் சர்வதேச அரசியல் ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தான் பிரதமராக வருவதன் மூலம் அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித்தேர்தலுக்கு முன்னதாக ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குவதற்கு நாடாளுமன்றத்தில் சில தில்லுமுல்லுகளை சந்திரிகா குமாரதுங்க மேற்கொண்டுள்ளார் என அந்த ஆய்வாளர் கூறியுள்ளார்.

இலங்கை வங்கி

இலங்கை வங்கி தனது 65 ஆவது வருட பூர்த்தியினை முன்னிட்டு நிலையான வைப்புக்களுக்கு 1% அதிகரித்த வட்டியினை வழங்குகின்றது (7+1=8%) என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். இவ்வதிகரிப்பு 31.08.2004 வரை செல்லுபடியாகும்.

உதவிப் பொது முகாமையாளர்
(வடபிராந்தியம்)
யாழ்ப்பாணம்.

மாபெரும் சைக்கிளோட்டப் போட்டி/மரதன் ஓட்டப்போட்டி

காலம் :- 06.08.2004 (வெள்ளி)
இடம் :- அராலி மத்தி வட்டுக்கோட்டை (ஐக்கிய விளையாட்டுக்கழகம்)
நேரம் :- காலை 6 மணி

சகல போட்டியாளர்களையும் இப்போட்டியில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
அராலி ஐக்கிய விளையாட்டுக்கழகம்.
வட்டுக்கோட்டை.

(901)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.